விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 05 சனிக்கிழமை (22.08.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 246

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# 16 ஆவது பிரதமராக பதவியேற்றார் ரணில்



(கொழும்பு)

இலங்கையின் 16ஆவது பிரதமராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று வெள்ளிக்கிழமை காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்பாக பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். (24ஆம் பக்கம் பார்க்க)

## உடன்படிக்கை கைச்சாத்து

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் காசிம் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் செயலாளர் துமிந்த திஸாநாயக்க ஆகியோர் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

இலங்கையின் 16 ஆவது பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பின்னர், இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. (எ-11)

## ஆஸி.ஒத்துழைப்பு

(சிட்னி)

இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜுலியா பிசொப் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய அரசாங்கத்திற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். 23ஆம் பக்கம் பார்க்க....

## சபாநாயகராக கரு ஜெயசூரிய

(கொழும்பு)

புதிய நாடாளுமன்றத்தின் சபாநாயகராக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி நடைபெறவுள்ள புதிய நாடாளுமன்றத்தின் முதல் அமர்வில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் இவரது பெயர் முன்மொழியப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது.

ஐ.தே.கவின் தேசியப் பட்டியலில் கரு ஜெயசூரியவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன் புதிய நாடாளுமன்றத்தின் முதல் உறுப்பினராக கரு ஜெயசூரிய பதவியேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## ஜனாதிபதி மைத்திரியை சந்தித்துப் பேச மூன் விருப்பம்

(நியூயோர்க்)

நியூயோர்க்கில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.நா பொதுச் சபைக் கூட்டத்தின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துப் பேச ஐ.நா செயலாளர் நாயகம் விருப்பம் வெளியிட்டுள்ளார்.

ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய போதே அவர் இந்த விருப்பத்தை வெளியிட்டுள்ளார்.

நியூயோர்க்கில் அடுத்த மாதம் இடம் 24ஆம் பக்கம் பார்க்க....

## தேசிய அரசிற்கு இணங்காதோர் கட்சியிலிருந்து நீக்கம்

### சந்திரிகா அதிரடி

(கொழும்பு)

தேசிய அரசாங்க கொள்கைகளுக்கு இணங்காத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள், கட்சியிலிருந்து நீக்கப்பட வேண்டுமென முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசாங்கமொன்றை அமைக்கும் திட்டத்திற்கு எதிர்ப்பை 23ஆம் பக்கம் பார்க்க....

## பிரதமர் பதவியேற்பில் மும்முனைச் சந்திப்பு

(கொழும்பு)

பிரதமர் பதவியேற்பு விழாவின் போது, மகிந்த - சரத் பொன்சேகா மற்றும் மகிந்த - மைத்திரி சந்திப்பு முக்கியத்துவம் பெற்றது.

இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா, மகிந்த அரசினால் கைது செய்யப்பட்டு அவரது உரிமைகள் பறிக்கப்பட்டிருந்த நிலையில் மைத்திரி அரசாங்கம் அவருக்கான அனைத்து கௌரவங்களையும் மீள வழங்கி பீல்ட் மார்ஷல் எனும் உயரிய பதவியையும் வழங்கியது. 23ஆம் பக்கம் பார்க்க....

## புதிய அமைச்சரவை திங்களன்று பதவிப்பிரமாணம்

(கொழும்பு)

புதிய நாடாளுமன்றத்தின் அமைச்சரவை நாளை மறுதினம் 24ஆம் திகதி பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முன்னிலையில் பிரதமராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

அதன் பின்னர், அமைச்சரவையின் பதவிப்பிரமாண நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 24ஆம் பக்கம் பார்க்க....

## தேசிய பட்டியல் உறுப்பினர்களை பிரதான கட்சிகள் வெளியிட்டன!

### ஐ.ம.சு.மு.வில் அங்கஜனுக்கு ஆசனம்

(கொழும்பு)

இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று தேசிய அரசாங்கம் அமைத்துள்ள இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் தங்களின் தேசியப்பட்டியல் மூலமான நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை வெளியிட்டுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி பெற்றுள்ள வாக்குகளின் அடிப்படையில் 13 தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் பெயர்களை அந்தக் கூட்டணி அறிவித்துள்ளது.

மலிக் சமரவிக்கிரம (ஐக்கிய தேசியக் கட்சி), கரு'ஜயசூரிய (ஐககிய தேசியக் கட்சி), டி.எம்.சுவாமிநாதன் (ஐக்கிய தேசியக் கட்சி), அத்துரலியே ரத்ன தேரர் (ஜாதிக ஹெல உறுமய கட்சி),

டாக்டர் ஜயம்பதி விக்கிரமரத்ன, வழக்கறிஞர் திலக் மாரப்பன, பேராசிரியர் சி.ஏ.மாரசிங்க, அனோமா கமகே, எம்.கே.டி.எஸ்.குணவர்தன,

சிறினால் டி மெல், டாக்டர் ஏ.ஆர். ஹாஃபீஸ் (ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கரஸ்), எச்.எம்.சல்மான் (ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்), எம்.எச்.எம். நவாவி (அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்) ஆகியோர் ஐதேமு கூட்டணியின் 24ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.தே.கவின் நிகழ்ச்சிநிரலுக்கு சு.கவை மாற்ற நடவடிக்கை !

### விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தின் வாலாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மாற்றுவதாகும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நிதி மோசடி விசாரணைப் பிரிவிற்கு நேற்று அழைக்கப்பட்டிருந்த வீரவன்ஸ, விசாரணைகளின் பின்னர் ஊடகங்களிடம் பேசும் போதே இதனைக் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப ஆட வைப்பதே இந்த தேசிய அரசாங்கமாகும்.

அத்துடன் ரணில் விககிரமசிங்கவின் சிறுபான்மை அரசாங்கத்திறகு பெரும்பான்மை பலத்தை வழங்குவதாகும்.

இந்த காட்டிக்கொடுப்புக்கு நாங்கள் இணங்க 24ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வேலையாட்கள் தேவை

தையல் வேலை தெரிந்த அனுபவமுள்ள ஆண்கள் உடன் தேவை.
தங்குமிட வசதி இலவசம்
(50,000 மேற்பட்ட சம்பளம்)
தொடர்புகளுக்கு:-0756293417
(லதுசன்), கிளிநொச்சி
(1547)

## தேவை

நல்ல நிலையிலுள்ள Scooter தேவை. Classic model விரும்பத்தக்கது.
(1551)
தொடர்பு : 0777959329

## வீடு வாடகைக்கு

யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையிலுள்ள ஒடை ஒழுங்கையில் சிறிய குடும்பத்திற்கேற்ற வீடு வாடகைக்கு உண்டு.
(1550)
தொடர்பு : 0772445706


## பெண் மரணம்



(கண்டி)

கண்டி அம்பிட்டிய பிரதேசத்தில் 27 வயது இளம் பெண்ணொருவர் நேற்று முன்தினம் காலை திடீரென உயிரிழந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருமண நிகழ்வு ஒன்றுக்கு செல்வதற்காக தன் உடல் அழகை மெருகூட்டிக் கொள்வதற்காக தென்னங்கும்புர பிரதேசத்தில் உள்ள அழகு நிலையமொன்றுக்கு சென்று திரும்பிய நிலையிலேயே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இவரது மரணத்துக்கு அழகு நிலையத்தில் உபயோகிக்கப்பட்ட ஏதேனும் இரசாயனப் பொருள் காரணமாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகப்படுகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஏ-11)


## மரண அறிவித்தல்

### அமரர் சபாபதி சத்தியநாதன்

**(உரிமையாளர்- கண்ணன் புத்தகசாலை, மல்லாகம் சந்தி )**



சுன்னாகம் தேவரானையைச் சேர்ந்த சபாபதி சத்தியநாதன் அவர்கள் 19-08-2015 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி- பூமணி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் சிவசித்திரபூபதி தம்பதியினரின் அருமை மருமகனும், செல்வராசமலரின் அன்புக் கணவரும், பூமிகா (யா/இராமநாதன் கல்லூரி மாணவி, ஜீவிகா (யா/நாகேஸ்வரி வித்தியசாலை மாணவி) ஆகியோரின் பிரியமான தந்தையும், சபா புஷ்பநாதன் (துர்க்கா பொத்தகச்சோலை, சுன்னாகம்), புஷ்பதேவி (கொழும்பு) ரஞ்சிதாதேவி, ஜகத்நாதன் (சாயி புக் சொப், கொட்டாஞ்சேனை), Dr.றேணுகாதேவி, செல்வநாதன் (டென்மார்க்), சபாநாதன் (ஜேர்மனி), சற்குணநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வரஞ்சிதமலர், செல்வரவீந்திரராசா (பாட்டா வர்த்தகர்), செல்வவிக்னேஸ்வரராசா (பாட்டா வர்த்தகர்), செல்வஸ்கந்தராசா (பிடவை வர்த்தகர், சுன்னாகம்), காலஞ்சென்ற செல்வமாணிக்கராசா ஆகியோரின் அருமை மைத்துனரும்,

சரோஜினிதேவி (நீதினி முகவர் தபாலகம் சுன்னாகம்), யோகராஜா (ஓய்வுபெற்ற விமான தொடர்பு அதிகாரி), செல்வராஜா (ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி), சுபாஜினி (கொழும்பு), முத்துராஜா (பொறியியலாளர் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை), கோமதி (டென்மார்க்), ஸ்ரீ நந்தினிதேவி (ஜேர்மனி), துஷ்யந்தி (சுவிஸ்) ஆகியோரின் பிரியமான மைத்துனரும்,

ஜெயகுமார் (சைக்கிள் விநியோகஸ்தர்), மிரிளாளினி, பிரேமநளினி (யா/மகாஜனக் கல்லூரி ஆசிரியை) , அலோமா ஆகியோரின் அன்பான சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (23-08-2015) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.
(C-1879)

சந்தை வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்

## வட இலங்கை சுதேச வைத்தியசபை பொதுச்சபைக் கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும்

காலம் :- 30/08/2015 பிற்பகல் 2.00 மணி

இடம் :- லங்கா சித்த ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி மண்டபம், சுன்னாகம்.

உறுப்பினர்களும், புதிதாக இணையவுள்ளவர்களும் தவறாது சமுகம்தரும்படியும் அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி

நிர்வாகம்,
வட இலங்கை சுதேச மருத்துவ சபை. (C-1883)

## Raveens EMC Karaveddy

மேற்படி நிறுவனத்துக்குரிய
Grade 11 மாணவர்கள் பங்குபெறும்

**IMPROMPTU ORATORY (ENGLISH)
and
PRIZE GIVING DAY**
முன் ஆயத்தமில்லாப் பேச்சும் (ஆங்கிலம்)
பரிசளிப்பு விழாவும்

குறிப்பு : சபையோர் ஆங்கிலத்தில் வழங்கும் விடயத் தலைப்புகளுக்கே மாணவர்கள் பேசுவார்கள்

இடம் : நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோயில் கல்யாண மண்டபம்

காலம் : 23-08-2015 ஞாயிற்றுக்கிழமை காலை 08.30

தலைவர் : ப.ஈஸ்வரநாதன்
நிர்வாகி - ரவீன்ஸ் EMC கரவெட்டி

**CHIEF GUEST**
Mr.S. Kokulathasan B.sc(Ag)M.sc (Bot)
(CHAIRMAN, Palmyrah Development Board of Sri lanka, Jaffna)

**Distribution of Prizes**
Mrs Sarojinidevi Kokulathasan BA Hons
(Rtd. ISA Thenmaradchy Educational Zone Chavachacheri)

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம். (C-1880)

ரவீன்ஸ் கல்விச் சமூகம்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## விக்னேஸ்வரன் பிரியங்கா

எமது உரிமையாளரும் கீழ்க்காணும் ஸ்தாபனங்களின் பணிப்பாளருமான கொற்றாவத்தையைச் சேர்ந்த திரு.ஐ.விக்னேஸ்வரன் அவர்களின் மகளான பிரியங்கா அவர்கள் கடந்த 29.07.2015 அன்று கொழும்பு பண்டாரநாயக்க மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் B.Sc பட்டம் பெற்றதனையிட்டு அவரை உளமார வாழ்த்தி அவர் மேன்மேலும் பல பட்டங்கள், பதவிகள் பெற்று நலமுடன் வாழ எல்லாம் வல்ல சித்தி விநாயகரின் அருள் வேண்டி வாழ்த்துகிறோம்.

*வாழ்த்துவோர் :*

முகாமையாளர்கள், கணக்காளர்கள், பணியாளர்கள்

| Ingaran Recreation Club | Yarl Beach Hotel | Raj Rest House |
|---|---|---|
| Pointpedro Road, Nelliady. | Jaffna Road, Vallai. | Paranthan Road, Puthugudiruppu. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகள் சபையின் போர்க்குற்ற அறிக்கை ஜனாதிபதியிடம் இன்று

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் இலங்கை தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணை அறிக்கையின் இரகசிய பிரதியொன்று இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது எனத் தெரியவந்துள்ளது.**

போர் இடம்பெற்ற காலத்தில் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச் செயல்கள் இடம்பெற்றதாக சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் ஆணைக்குழு விசாரணை நடத்தியிருந்தது.

எந்தவொரு நாட்டுக்கு எதிராகவும் விசாரணை நடத்தினால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகள் ஆரம்பமாகும் முன்னதாகவே அந்த அறிக்கையை குறித்த நாட்டுக்கு இரகசியமாக வழங்குவது வழமையானதாகும்.

போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக 41 படையதிகாரிகள் மற்றும் இரண்டு சிவிலியன்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக தேர்தல் பிரசார மேடைகளில் கூறப்பட்டிருந்தது.

எனினும் சர்வதேச தரத்திலான உள்ளக விசாரணைப் பொறிமுறைமை ஒன்றை ஏற்படுத்த மனித உரிமைப் பேரவையும் இலங்கையும் இரகசிய இணக்கம் கண்டுள்ளதாக அண்மையில் சனல்4 ஊடகம் தகவல் வெளியிட்டிருந்தது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகள் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி இலங்கையை போர்க் குற்றச் செயல் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்கும் ஆவணமொன்றை அமெரிக்கா சமர்ப்பிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

போரின் போது அரசாங்கமொன்று பின்பற்ற வேண்டிய நியதிகளை பின்பற்றியதாக தெரிவிக்கப்படவுள்ளதாகவும், போர்க் குற்றச் செயல்கள் இடம்பெறவில்லை என கூறப்படவுள்ளதாகவும் சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

## சுதந்திரக் கட்சியின் விலகலால் ஐ.ம.சு.முன்னணி கலைந்தது

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னண்ணியில் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விலகியுள்ள நிலையில், அந்த முன்னணி கலைந்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகித்த மிகப் பெரிய கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படுவது தொடர்பில் உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட்டுள்ளது.

இதன்காரணமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கலைந்துள்ளதாக அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர்.

இந்த நிலையில், தினேஷ் குணவர்தன தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி, விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி மற்றும் உதய கம்மன்பில தலைமையிலான பிவித்துரு ஹெல உறுமய ஆகிய கட்சிகள் தனித்து விடப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் இந்த கட்சிகள் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நாடாளுமன்றத்தில் செயற்படும் என கூறப்படுகிறது. (இ-7)



நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று சாதனை படைத்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் நேற்று பிரதமராக ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்ற நிகழ்வின் போது... (படங்கள்: பொ.சோபிகா)

## தேர்தல் முடிபுகள் மனித உரிமைகளுக்கு உந்துதல் அளிக்கும்

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமை மேம்பாடு மற்றும் நல்லிணக்கம் தொடர்பில், வெளியாகியுள்ள தேர்தல் முடிவுகள் உந்துதலை அளிக்கும் என்று பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

பிரான்ஸின் வெளியுறவு அமைச்சு பேச்சாளர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் பொதுத் தேர்தலில் அதிகளவான மக்கள் பங்கேற்றமையை அவர் வரவேற்றுள்ளார்.

இந்தநிலைமை, ஜனநாயகத்துக்கு உந்துதலை அளிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் பிரான்ஸ் தொடர்பில் மனித உரிமைகள் மேம்பாடு தொடர்பில் இலங்கைக்கு உதவியளிக்கும் என்றும் பேச்சாளர் தெரிவித்தார். (இ-7)

## ஐ.தே.க.தேசியப்பட்டியலில் தெரிவானவர்களின் விபரம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றிற்கு முன்னாள் அமைச்சர்களான டி.எம் சுவாமிநாதன், கரு ஜெயசூரிய ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

தேசியப்பட்டியல் ஊடாக தெரிவானோர் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மலிக் சமரவிக்ரம, டி.எம. சுவாமிநாதன்,கரு ஜெயசூரிய,அதுரலிய ரத்ன தேரர், ஜயம்பதி விக்ரமரட்ன,திலக் மாரப்பன,சீ.ஏ. மாரசிங்க, எம்.கே.டி.எஸ். குணவர்தன,எம்.எச்.எம்.எம். நாவீ (அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்), எம்.எச்.எம். சல்மான் (முஸ்லிம் காங்கிரஸ்), ஏ.ஆர்.ஏ. ஹாபீஸ் (முஸலிம் காங்கிரஸ்), அனோமா கமகே, சிறினால் டி மெல் ஆகியோரின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 260**

## அஹங்காரத்தை விடுதல்

...நீங்கள் உங்களைப் பற்றியே எண்ணிக்கொண்டு இருந்தால், வாழ்ந்தும் வாழாமலேயே இருக்கிறீர்கள்.

அது உங்கள் அழகிற்கும் வசீகரத்திற்கும் ஒரு தடையாகவே இருக்கிறது.

இதனால் உங்கள் அழகு இயல்பாக வருவதில்லை. விலங்குகளையும் இயற்கையையும் பாருங்கள்.

அவை மிக அழகாகவும் தடையற்றும் இசைவாகவும் செல்கின்றன.

அது ஏன்? ஏனெனில், அவை தங்களைப் பற்றி எண்ணிக்கொண்டிருப்பதில்லை.

அவை வெறுமனே பிரபஞ்ச் இருப்புத் தன்மையுடன் ஒன்றாக இருப்பதிலேயே மகிழ்ச்சியடைந்து விடுகின்றன.

மக்கள் உங்களை கவனிக்கிறார்கள் என்று எண்ண ஆரம்பித்த கணத்திலேயே, அஹங்காரம் உள்ளே நுழைந்து விடுகிறது.

நீங்கள் உங்கள் இயல்பான சுயத்தை இழந்துவிடுகிறீர்கள்.

குழந்தைகள், பெரியவர்களைப் போல் தங்களைப் பற்றியே எண்ணிக் கொண்டிருப்பதில்லை.

அவர்கள் விளையாடுவதைப் பார்த்தால் தெரியும்- எல்லாமே மிக அழகாகவும் கள்ளங்கபடமற்றும் இருக்கும்.

நீங்கள் புகைப்படம் எடுக்கும் பொழுது கூடப் பார்த்திருக்கலாம்- நீங்கள் தெரிந்து நின்றுகொண்டிரு எடுத்த புகைப்படத்தை விட உங்களுக்குத் தெரியாமலேயே எடுத்த புகைப் படங்கள் மிகவும் நன்றாக இருக்கும்.

உங்களைப் புகைப்படத்திற்காக நிற்கச் சொன்னவுடனேயே நீங்கள் உங்களைப் பற்றி எண்ண ஆரம்பித்து விடுகிறீர்கள்.

மக்கள் என்ன சொல்லி தமும்



பேற்படுத்தி விடுவார்களோ என்று உங்கள் அஹங்காரம் அஞ்சுகிறது.

எப்பொழுதும் தன்னைப் பற்றியே எண்ணிக்கொண்டிருக்கும் அஹங்காரமானது எல்லாவற்றிலும் சாதக பாதகங்களைக் கணக்கிட்டுக் கொண்டிருக்கிறது.

அது எப்பொழுதும் எல்லாருடைய கண்களுக்கும் அபிப்பிராயங்களுக்கும் மதிப்புக் கொடுத்து தனது சொந்த சுதந்திரத்தை இழந்துவிடுகிறது.

நமது தியான வகுப்புகளில்கூட நீங்கள் பார்த்தீர்களானால் தியான முறைகளை ஆரம்பிப்பதற்கு முன்னால் உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கண்கட்டும் துணியினால் உங்கள் கண்களை கட்டிக்கொண்டு விடுமாறு நான் சொல்வேன்.

ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? முதலில் மற்றவர்கள் தங்கள் கண்களை ஒழுங்காகக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்கிறீர்கள்.

நீங்கள் தியானக் கூடத்தில் கூட இந்த அளவிற்கு உங் களைப் பற்றிய எண் ணத்திலேயே இருக்கி றீர்கள்.

சிலர் தியாகங்களைக் கூடச் சரியாகச் செய்வ தில்லை.

ஏனெனில், தன் னார்வத் தொண்டர்களும் நானும் கண் களைத் திறந்து வைத் துக்கொண்டிருக்கிறோமே!

நீங்கள் தியானங்களை வெறுமனே ஒரு கட்டுப்படுத்தப்பட்ட வகையில் செய்துவிட்டு இறுதியில் இந்த தியான முகாமிற்கு வந்த நோக்கத்தையே இழந்து விடுகிறீர்கள்.

நீங்கள் கணக்குப் பார்ப்பதை நிறுத்தி விட்டு கள்ளங்கபட மற்றும் திறந்தும் இருக்க ஆரம்பித்தால் எப்பொழுதும் ஆச்சரியத்தாலும் புத்துணர்ச்சியாலும் நிரப் பப்படுவீர்கள். வாழ்க்கை உங்களுக்கு எப் பொழுதுமே ஒருபோதும் மந்தமாகவும் தடையாகவும் இருக்காது.

இன்னொரு விடயம்... கள்ளங் கபடமற்றவர்கள் யாருக்கும் எந்த விதத் தீங்கும் செய்வதில்லை. ஷ

ஏனெனில், தீங்கு செய்வதற்கும் திட்டமிட வேண்டும்.

அவர்கள் அறியாமல் தீங்கு செய்து விட்டால்கூட, மக்கள் அதைப் பொரு ட்படுத்த மாட்டார்கள்.

ஏனெனில், அவர்களுக்குத் தெரியும், அது வேண்டுமென்றே செய்யப் பட்டதல்ல என்று.

அவர்களுடைய உடல் மொழியே, அவர்களது கள்ளம் கபடமற்ற தன்மையை அறிவித்து அவர்களுக்கு ஆதரவாகவும் நிற்கும்.

சரி... இப்பொழுது... நாம் அஹங்காரத்தின் இன்னொரு முக்கிய வடிவத்தைப் பார்ப்போம்- இது கல்வியறிவினால் வரும் அஹங்காரம்.

நீங்கள் வளர வளர கலந்து வழகுவதன் மூலம் மக்களைப் பற்றிய தீர்மானங்களையும் புனித நூல்களிலிருந்தும் புத்தகங்களிலிருந்தும் தகவல் களையும் சேகரிக்கிறீர்கள்.

இந்த இரண்டும் சேர்ந்து உங்கள் மொத்த மன அமைப்பையும் நிர்ணயிக்கிறது.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# அதிசய உலகம்

## ஜேர்மனியில் டைனோசர்கள் வாழ்ந்தது கண்டுபிடிப்பு!

### பிரமிக்க வைக்கும் ஆதார புகைப்படம்



ஜேர்மனி நாட்டில் பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் டைனோசர்கள் வாழ்ந்ததற்கான உறுதியான ஆதாரங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜேர்மனியை சேர்ந்த மெய்பொருள் மூல ஆராய்ச்சியாளர்கள், டைனோசர்கள் ஜேர்மனியில் வாழ்ந்தனவா என்பது குறித்து பல வருடங்களாக ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஹேனோவேர் நகரில் சுமார் 135 முதல் 145 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் டைனோசர்கள் வாழ்ந்துள்ளதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கடந்த வாரம் உறுதிப்படுத்தினர்.

கிரெடாசியஸ் காலத்தில் நீண்ட கழுத்துடைய பல டைனோசர்கள் இப்பகுதியில் வாழ்ந்ததற்கான பிரமாண்ட கால் தடங்கள் தற்போது கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன.

இந்த கால் தடங்கள் 1.20 மீற்றர் குறுக்களவிலும், 50 மீற்றர் தூரம் நீளமும் உடையதாக இருக்கின்றன.

இது குறித்து பேசிய Benjamin Englich என்ற ஆராய்ச்சியாளர், நீண்ட கழுத்துடைய இந்த டைடோனசர்கள் வெகுதூரம் பயணம் மேற்கொண்டபோது இந்த கால் தடங்கள் பதிந்திருக்க வேண்டும்.

ஒவ்வொரு கால் தடமும் 43 செண்டி மீற்றர் வரை பூமியில் பதிந்துள்ளதால், இந்த டைனோசர்களின் எடை சுமார் 25 முதல் 30 தொன் வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. தெரபோடா இனத்தை சேர்ந்த டைனோசர்கள் வாழ்ந்து மறைந்து பல ஆண்டுகளுக்கு பின்னர் இந்த டைனோசர்கள் இந்த பகுதியில் வாழ்ந்திருக்க வேண்டும்.

# சமைப்போம் சுவைப்போம்

## அகத்திக் கீரைக் கூட்டு



**தே.பொருட்கள்:**

அகத்திக்கீரை - 1 கட்டு

பாசிப்பருப்பு - 50 கிராம்

தேங்காய் - 2 டேபிள் ஸ்பூன்

மிளகாய் - 3

கடுகு - 1 டீஸ்பூன்

உளுத்தம் பருப்பு - 1 டீஸ்பூன்

உப்பு - தே.அளவு

தே.எண்ணெய் - 1 டேபிள் ஸ்பூன்

**செய்முறை**

முதலில் பாசிப்பருப்பை நீரில் 1 மணிநேரம் ஊற வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், கடுகு, உளுத்தம் பருப்பு, மிளகாய் சேர்த்து தாளிக்க வேண்டும். பின் அதில் கீரையை போட்டு நன்கு கிளறி, பின் ஊற வைத்துள்ள பாசிப்பருப்பை கழுவிப் போட்டு நன்கு பிரட்டி விட வேண்டும். பிறகு அதில் தேவையான அளவு தண்ணீர் தெளித்து, மூடி வைத்து வேக வைக்க வேண்டும். கீரையானது நன்கு வெந்த பின், அதில் உப்பு மற்றும் துருவிய தேங்காயை சேர்த்து நன்கு கிளறி இறக்கினால், அகத்திக்கீரை கூட்டு ரெடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நயப்பு



**திரு. முருகுப்பிள்ளை இரவீந்திரன்**

(பாடசாலைப் பணியாளர்) யாழ். விக்ரோறியாக் கல்லூரி

எமது கல்லூரியில் 23.05.2003 இல் இருந்து 22.08.2015 (இன்று வரை) 12 வருடங்கள் சிறப்பான சேவையாற்றி 22.08.2015 இல் ஓய்வு பெறும் பாடசாலைப் பணியாளர் முருகுப்பிள்ளை இரவீந்திரன் அவர்களின் சேவையைப் பாராட்டுவதோடு அவர் எல்லா வளமும் பெற்று தமது குடும்பத்தினருடன் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.

(586)



# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை திருமஞ்சத் திருவிழா

காலம்- இன்று 22-08.2015
(ஆவணி 06 ஆம் நாள் சனிக்கிழமை- மாலை 6.00 மணி)



திருமஞ்சத்தில் அம்பாள் வலம்வரும் காட்சியை தரிசித்து நல்லருள் பெறுவோமாக

நிர்வாகசபை,
ஸ்ரீதுர்க்காதேவி
தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

மஞ்சத்திருவிழா
உபயகாரர்


# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைக ளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை யாழ்ப்பாணத்தில் உள்ள சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

அந்த வகையில் இராமசாமிப் பாரியாரியார் சந்தி, கல்வியங்காடு ஜி.பி.எஸ். வீதி, முடமாவடி , திருநெல்வேலிசந்தி, மருத்துவபீடப் பிரதேசம், பொற்பதி வீதி, பிரம்படி லேன், அச்சுக்கூட லேன், கருவப்புலம்வீதி, கம்பஸ் லேன், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மண்டபம், யாழ். பல்கலைக்கழக கலைப்பீடம் ஆகிய பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)


**நகைக்கடை தளபாடம் விற்பனைக்கு**

169, மின்சார நிலைய வீதியில்
அமைந்துள்ள தர்மதா நகை மாடத்தில்
உள்ள தளபாடம் யாவும்
விற்பனைக்கு உள்ளது.
நேரில் வந்து பார்வையிடவும்.

தொடர்புகளுக்கு :- 0777110281

(1530)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 94 சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/1156 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 38<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்<br>தொ.இ: G/1903 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 43<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/1157 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 30 செவ் 4 இல்<br>உயரம்: 115cm<br>தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர்<br>தொ.இ: G/1905 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 35 சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: B/1158 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 63 செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: HNDM/ தனியார் தொழில்<br>தொ.இ: G/1909 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா:12 செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்<br>தொ.இ: B/1159 | பிறப்பு: 1982 RC<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: B.COM, M.COM/ தனியார் தொழில்<br>தொ.இ: G/1914 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# ராசி பலன்

22.08.2015
(ஆவணி 05, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சப்தமி காலை 8.43 மணிவரை
விசாகம் மாலை 6.22 மணிவரை
இராகுகாலம் 9.05-10.35 மணிவரை
சுபநேரம் 3.05-4.35 மணிவரை
சந்திராஷ்டமம்-ரேவதி, அச்சுவினி
கீழ்நோக்கு நாள்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | பகல்12.00இற்கு விரு-சந் | | செவ் |
| | | | குரு, சூரி, சுக் |
| | | சந் சனி | புதன் ராகு |

**மீனம்:** அன்பால் சாதித்துக் காட்டும் நாள், உறவினர்களை உபசரிப்பதில் அதிக அக்கறை காட்டு வீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிப்பீர்கள்.

**மேடம்:** தொழிலில் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, உடல் ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**இடபம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வப்படுவீர்கள், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும் நாள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காண்பீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும்.

**கும்பம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள் பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்:** பெற்றோர் மீதான பாசம் கூடும், அடிப்படை வசதி வாய்ப்புக் களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், கல்வி நலன் கருதிய செலவுகள் ஏற்படலாம்.

**மகரம்:** மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், இறை வழிபாட்டில் இதயத்தைச் செலுத்துவீர்கள்.

**சிம்மம்:** தாயின் உடல்நலம் சீராகும், வாகன சுகமுண்டு, தொலைபேசித் தகவல்கள் நெஞ்சை நெகிழ வைக்கும், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும், சுப செலவுகள் கூடும் நாள்.

**தனுசு:** இடமாற்றம், ஊர்மாறறம் செய்யும் எண்ணம் உருவாகும், சுப செலவு களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், சந்தித்தவர்களால் சந்தோசங்கள் அதிகரிக்கும் நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்:** பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், பொருளாதார நிலையை உயர வழியமைத்துக் கொள்வீர்கள்.

**கன்னி:** நீண்ட நாளைய பிணக்குகளில் புதிய திருப்பங்கள் ஏற்படலாம், சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் நன்மைதரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டின் பாதுகாப்பினை உறுதிப்படுத்திவிட்டு நல்லூர் ஆலயத்திற்கு செல்லுமாறு அறிவுரை

(யாழ்ப்பாணம்)

**நல்லூர் ஆலயத்திற்கு செல்லும் போது வீட்டின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி விட்டு செல்லுமாறு யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.வூட்லர் தெரிவித்துள்ளார்.**

தற்போது நல்லூர் திருவிழாக் காலம் ஆரம்பித்து உள்ளமையால் இந்துக்கள் அனைவரும் கோயில்களுக்கு சென்று வருவது வழமை.

இரவு,பகல் மற்றும் அதிகாலை என பல நேரங்களில் கோவில்களுக்கு சென்று வருகின்றனர். இவ்வாறு செல்லும் போது வீட்டில் யாருமற்ற நிலையிலேயே அனைவரும் கோவிலுக்கு சென்று வருகின்றனர். இதனால் இவை தொடர்பில் அவதானித்து விட்டு அந்த வீடுகளுக்கு திருடர்கள் திருடுவதற்கு செல்கின்றனர்.

எனவேதான் வீடுகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி செல்லுமாறு நாம் கேட்டுக் கொள்கின்றோம். ஆலயத்திற்கு அல்லது வெளியில் செல்லும் போது வீட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப் பட்டுள்ளதா என்பதனை அவதானித்து விட்டு செல்லல் வேண்டும்.

திருடர்கள் ஆலயத்திலும் வெளி இடங்களிலும் தமது கைவரிசையினை காட்டி வருகின்றனர். இது தொடர்பில் பொலிஸாராகிய நாம் நடவடிக்கைகளினை மேற்கொண்டு வருகின்றோம். இந்த விடயத்தில் தனியே பொலிஸார் நடவடிக்கை மட்டும் எடுத்தால் கட்டுப்படுத்த முடியாது. பொது மக்களும் ஒத்துழைப்பு தரவேண்டும்.

மாறாக ஏனோ தானோ என்று இருந்து விட்டால் நஷ்டம் தவறு விட்டவர்களுக்கு தான். உங்கள் வீடுகளிற்கு அருகில் சந்தேகத்திற்கு இடமாக யாரும் நடமாடினால் அவர்கள் தொடர்பில் அவதானத்துடன் இருக்க வேண்டும். இதே போன்று சன நெரிசலில் ஆலய வழிபாட்டில் ஈடுபடும் போது. உங்களுடைய உடைமைகளில் எப்போதும் ஒரு கவனத்தை வைத்திருங்கள்.

இவ்வாறான ஆலய திருவிழாக்களில் திருட்டுக்களில் ஈடுபடுபவர்கள் பெரும்பாலும் பெண்களாகவே உள்ளனர்.

அதிலும் அவர்கள் வெளி மாவட்ட பெண்களாகவே உள்ளனர். சாதாரண பெண்கள் போன்று உடையணிந்து வரும் இவர்கள் அதிகரித்த சன நெரிசலை பயன்படுத்தி தமது திருட்டினை மேற்கொள்கின்றனர். இவரகளை இலகுவில் அடையாளம் காணவும் முடியாது.

இரவு நேரங்களில் ஆலயத்திற்கு வருபவர்கள் தம்முடைய வீடுகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். வீட்டில் வயோதிபர்களை தனியாக விட்டு செல்வதனையும் தவிர்க்க வேண்டும். திருட அல்லது கொள்ளையடிக்க வருபவர்கள் வயோதிபர்களை தாக்கவும் கூடும். இதனால் எதிர்பாராத சம்பவங்களும் இடம் பெறலாம்.

ஆகவே பொலிஸாரின் அறிவுறுத்தல்களை அலட்சியம் செய்யாமல் அறிவுறுத்தல்களை பின்பற்றி பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதே வேளை நல்லூர் கந்தன் ஆலய கொடியேற்றத்தின் போது பெறுமதி மிக்க தங்க சங்கிலிகள் திருட்டு போயிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-4)

# யாழில் அறநெறிப் பாடசாலைகளை நடத்துவதில் ஆலயங்கள் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும்

## அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அறநெறிப் பாடசாலைகளை நடத்துவதில் ஆலயங்கள் கூடுதலாக அக்கறை செலுத்தவேண்டும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் யாழ். மாவட்ட அறநெறிப் பாடசாலைகளின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் *அருள் நெறி* விழா இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் கடந்த புதன் கிழமை ஆரம்பமாகியது. இவ்விழாவில் பிரதம விரு ந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யாழ்.மாவட்டத்தில் ஆலயங்கள் சில அறநெறிப்பாடசாலைகளை சிறந்த முறையில் இயக்கி வருகின்ற அதேவேளை நாளாந்தம் பல ஆலயங்கள் நிர்வாகம் சம்பந்தமான விடயங்களில் பிணக்குகளை தீர்ப்பதற்காக மாவட்ட செயலகத்தினையும் நீதிமன்றங்களினையும் நாடுவதோடு பெரும் தொகை நிதியினையும் வழக்குகளிற்கு செலவிடுகின்றன.அதேவேளை அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பித்து நடத்துவதில் கவனம் செலுத்துவதில்லை. வழக்குகளிற்கு செலவிடும் பணத்தினை அறப்பணிகளிற்கு குறிப்பாக அறநெறிப்பாடசாலைகளை நடத்துவதற்கு செலவிடுவதன் மூலம் யாழ்.மாவட்டத்தில் அறநெறிக் கல்வியை வளர்ப்பதற்கும் அதன் மூலம் சிறந்த ஒழுக்க விழுமியங்கள் சார்ந்த சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு முன்வரவேண்டும்.

மேலும் யாழ்.மாவட்டத்தில் சில கோயில்கள் மிருக பலியிடலை தொடர்ந்தும் நடத்துகின்றன. அன்பை அடிப்படையாகக் கொண்ட எமது இந்து மதத்திற்கு முரணான இம் மிருக பலியிடலை எதிர்காலத்தில் இவ் ஆலயங்கள் மேற்கொள்வதை நிறுத்திக்கொள்ளல் வேண்டும்.

மேலும் *அருள்நெறி விழா* எனும் தலைப்பில் இந்து சமய கலா சார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் இவ்விழா யாழ்.மாவட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்களி டையே ஓர் உத்வேகத்தை ஏற்ப டுத்தும் எனவும் இதன் மூலம் யாழ். மாவட்டத்தில் அறநெறிப்பாடசாலைகளின் வளர்ச்சிக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் செயற்பாடுகள் பாராட்டத் தக்கவை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)




# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் புதிதாக நியமனம் வழங்கப்பட்ட 240 பட்டதாரி ஆசிரியர்களுக்கான திசைகோட்படுத்தல் பயிற்சிப் பட்டறை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்று வருவதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்னி பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்குடன் கடந்த ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு கணித, விஞ்ஞான, தகவல் தொழில்நுட்ப மற்றும் ஆங்கில பாடத்துக்குரிய பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டது.

அவர்களுக்குரிய திசைகோட்படுத்தல் பயிற்சிப் பட்டறை இரண்டு அமர்வுகளாக நடைபெறுகின்றன.

முதலாம் அமர்வு கடந்த 7ஆம் திகதியில் இருந்து 14ஆம் திகதி வரையும் நடைபெற்றது. இரண்டாவது அமர்வு நேற்று முன்தினம் 20ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில் கற்றல், கற்பித்தல் செயற்பாடு, மாணவர்களின் உளவியல் தொடர்பான விடயங்கள், சுகாதார செயற்பாடுகளை மேம்படுத்தல், பாடசாலை முகாமைத்துவம் அனர்த்த பாதுகாப்பு, சமூக உறவு போன்ற விடயங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்படுகின்றன.

2.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நடைபெறும் இப் பயிற்சிப் பட்டறையில் 60 விரிவுரையாளர்கள் கலந்து கொண்டுள்ளனர். அவர்களில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், வைத்தியர்கள், ஆன்மீக தலைவர்கள், பொதுநிர்வாக துறையில் உயர் நிலையில் உள்ளவர்கள் பங்கேற்றுள்ளனர்.

இப் பயிற்சிப் பட்டறை வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரின் நெறிப்படுத்தலில் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பி.செல்வின் இரேனியஸின் உதவியுடன் வடக்கு மாகாண கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான க.சத்தியபாலன் மற்றும் க.பிறட்லி ஆகியோரின் மேற்பார்வையில் நடைபெற்று வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# 50 வருடங்களுக்கு மேலாக திருத்தங்களின்றி 3 வீதிகள்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை (புலோலி) பிரதேச சபைக்குற்பட்ட குறிப்பிட்ட சில வீதிகள் நீண்ட காலமாக திருத்தப்படாது காணப்படுவதாக பயணிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் காந்தியூர் ஆஞ்சநேயர் கோயில் வீதி, வட்டுவனை காந்தியூர் வீதி, காந்தியூர் முன்பள்ளி வீதி குரும்பைக்கட்டி வைரவர் கோயில் வீதி என்பன கடந்த 50 வருடங்களாக திருத்தப்படாது காணப்படுகின்றது.

மேற்குறித்த வீதிகள் புலோலி தென்மேற்கு ஜே/411, புலோலி வடமேற்கு ஜே/412 போன்ற கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்டவையாக காணப்படுகின்றது.

இவ்வீதியூடாக தினமும் போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்ற பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நோயாளர்கள், கர்ப்பிணிகள் என்போர் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வீதிக் கற்கள் மழைகாலத்தில் வெளிக்கிளம்பி காணப்படுவதால் நடந்து செல்பவர்கள் மிகுந்த சிரமத்தினை எதிர்நோக்குகின்றனர். இது தொடர்பாக பொதுமக்களால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டும் இதுவரைக்கும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே 50 வருடங்களாக திருத்தப்படாது கவனிப்பாரின்றி காணப்படுகின்ற மேற்குறித்த வீதிகளை திருத்தி சீரான முறையில் செப்பனிட்டுத் தருமாறு அவ்வீதிகளை தினமும் பயன்படுத்தி வருகின்ற பயணிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5)



**யாழ். மாவட்டச் செயலகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்றைய தினம் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வு காலை 9 மணிக்கு தேசியக் கொடி ஏற்றலுடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து இரத்ததான நிகழ்வும் இரத்ததானம் வழங்கியவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது.**

**(படங்கள்: பொ.சோபிகா)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூருக்கு இன்று விஜயம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி மீள்குடியேற்றம் குறித்து ஆராய்வார்

## பிரதமர் ரணிலும் உடன் செல்கிறார்



(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று சனிக்கிழமை திருகோணமலை மாவட்டத்தின் சம்பூருக்கான விசேட விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார். திருகோணமலையில் மூதூர் கிழக்கு சம்பூர் பகுதிகளுக்கு விஜயம் செய்யும் ஜனாதிபதி அப்பிரதேசங்களில் இடம் பெற்று வரும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளைப் பார்வையிடுவதுடன் மக்களுக்கான காணி உறுதிப் பத்திரங்களையும் வழங்கவுள்ளார்.**

பொதுத் தேர்தலையடுத்து ஜனாதிபதி வெளிப் பிரதேசங்களுக்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயமாக இது அமைவதுடன் அவருடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இவ்விஜயத்தில் இணைந்து கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று சனிக்கிழமை மதியம் திருகோணமலைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். மூதூர் கிழக்கு சம்பூர் பகுதி மீள்குடியேற்றம் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இவ் விஜயம் அமையவுள்ளது.

2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற கடும் யுத்தத்தின் காரணமாக இப்பகுதி மக்கள் பாதுகாப்பு கருதி வெளியிடங்களுக்கு இடம்பெயர்ந்தனர். 4 வருடங்களின் பின்னர் இம் மக்கள் திருகோணமலை மாவட்டத்திற்கு மீள அழைத்து வரப்பட்டு கிளிவெட்டி. மணல்சேனை, பட்டித்திடல் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப் பட்டிருந்தனர். இவர்களில் சிலர் கட்டைபறிச்சான் நலன் புரி நிலையங்களிலும் தற்காலிக குடில்களிலும் தங்க வைக்கப்பட்டனர்.

மக்கள் சம்பூர் பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்து வெளியேறியதைத் தொடர்ந்து அப்பிரதேசத்தினை அதியுயர் பாதுகாப்பு பிரதேசமாக அரசாங்கம் அறிவித்தது. அங்கு பாரிய கடற்படை முகாம் ஒன்றும் அமைக்கப் பட்டு பாதுகாப்பு நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இம்மக்கள் வாழ்ந்த குடியிருப்பில் 818 ஏக்கர் காணிகள் முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்காக தனியார் நிறுவனம்ஒன்றுக்கு (கேற்வே) முன்னைய ஜனாதிபதியால் வழங்கப்பட்டு இருந்தது.

கடந்த தை மாதம் இடம் பெற்ற ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதி இக்காணிகளை மக்கள் மீள்குடியிருப்புக்காக விடுவித்திருந்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து குறித்த நிறுவனத்தால் உயர் நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கு உயர் நீதி மன்றினால் தள்ளுபடி செய்யப்பட்டு காணிகள் உரியவர்களுக்கு ஒப்படைக்கப்பட வேண்டும் என தீர்ப்பும் வழுங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தற்காலிக மனைகளில் தங்கியிருந்தவர்கள் தங்களது சொந்தக் காணிகளில் மீள் குடியேறியுள்ளனர். தமக்கான நிரந்தர வீடுகள். மின்சாரம், பாதை அமைப்பு, குடிநீர் விநியோகம் என்பன வழங்கப்பட வேண்டும் என மக்கள் அரசுக்கு வேண்டுகோள் விடுத்த வண்ணமுள்ளனர்.

பாராளுமன்ற தேர்தல் முடிவடைந்த நிலையில் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முதற் தடவையாக இப்பகுதிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர், கிழக்கு மாகாண மீள்குடியேற்ற அமைச்சு என்பன இணைந்து இவ்விஜயத்துக்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனாதிபதிக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் சுதந்திரக் கட்சியில் இருந்து நீக்கப்படலாம்

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்னரும் பொதுத் தேர்தல் முடிவ டைவதற்கு முன்னரும் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக செயற்பட்ட ஸ்ரீ.சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்களை கட்சியில் இருந்து நீக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக தெரியவந்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் கூடிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு, தேசிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவது என தீர்மானித்தது.

இந்த தீர்மானத்திற்கு எதிராக செயற்படும் அனைவரும் கட்சியில் இருந்து நீக்கப்படுவார்கள் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேற்படி செயற்குழுக் கூட்டத்தில் மகிந்த ராஜபக்ஷ அணியை சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

தேசிய அரசாங்கத்தில் இணைவது உட்பட அனைத்து அதிகாரங்களை மத்திய செயற்குழு கட்சியின் தலைவரான ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளது.

இவ்வாறான நிலையில், மகிந்த ராஜபக்ஷ அணியினர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் அமைதியாக இருக்க வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. (இ-7)

# ஜனாதிபதியின் மகள் பிரதம விருந்தினர்

(கொழும்பு)

சிவில் பாதுகாப்புப் படையினரின் சேவா வனிதா நடத்தும் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு நிகழ்வில் ஜனாதிபதியின் புதல்வி சதுரிக்கா சிறிசேன பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

இன்று 22 ஆம் திகதி இந்த நிகழ்வு கொலன்னாவையில் இடம்பெறவுள்ளது.

இதன்மூலம் திரட்டப்படும் பணம் இராணுவத்தினருக்கான வீடமைப்புத் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படவுள்ளது. அத்துடன் விசேட தேவையுடைய இராணுவத்தினரின் நலன் பேணல் திட்டங்களுக்கும் சீட்டிழுப்பின் ஊடாக திரட்டப்படும் நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

மேலும் விசேட தேவையுடைய இராணுவத்தினருக்கான முச்சக்கர சைக்கிள் வண்டிகள் வழங்குதல், இராணுவத்தினரின் பிள்ளைகளுக்கு பாடசாலைக் கொப்பிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்குதல் என்பவற்றோடு இலவச மருத்துவ சிகிச்சை முகாமும் நடைபெறவுள்ளது. (இ-7)

# வடக்கு மாகாணசபை ஊடாக 85 சனசமூக நிலையங்களுக்கு 10ஆயிரம் ரூபா வழங்கப்படும்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி பிரதேசசபைக்குட்பட்ட 85 சனசமூக நிலையங்களுக்கு வடமாகாணசபை ஊடாக தலா 10ஆயிரம் ரூபா விரைவில் வழங்கப்படவுள்ளதாக வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி பிரதேசசபை செயலாளர் க.கனகதுரை தெரிவித்துள்ளார்.

சனசமூக நிலையங்களின் வளர்ச்சி நிலையை அதிகரிக்கும் நோக்கிலே வடமாகாண சபையால் அன்பளிப்பாக மேற்படி நிதித்தொகை வழங்கப்படவுள்ளது.

இக்கொடுப்பனவுகள் பெரும்பாலும் அடுத்தவார இறுதியில் வழங்கப்படும் என செயலாளர் மேலும் தெரிவித்தார். (இ-5-60)

# திரைப்பட வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

Life Entertainment தயாரிப்பில் ஈழத்துக் கலைஞர் செந்தூரன் மகேந்தி இயக்கத்தில் வெளிவந்துள்ள நண்பி திரைப்படம் எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.செல்லா [illegible] டவுள்ளது. [illegible]

# ஓர் ஆண்டு திசவ அழைப்பிதழ்



கடந்த 03.09.2014 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் கந்தையா கிருஷ்ணபிள்ளை

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு (திவசம்) எதிர்வரும் 22.08.2015 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கிளிநொச்சி புதுமுறிப்பு விக்னேஸ்வரா பாடசாலைக்கு அருகில் அமைந்துள்ள எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் கிரியை நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்வதுடன் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

புதுமுறிப்பு,
கிளிநொச்சி.

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தி முனையில் துணிகர கொள்ளை

## 50 ஆயிரம் ரூபா பணம்; பல இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் பறிபோயின





(வவுனியா)

**வீடொன்றின் கதவை கூரிய ஆயுதங்களைக் கொண்டு உடைத்து உள்நுழைந்த திருடர்கள் வீட்டு உரிமையாளரைத் தாக்கி விட்டு 50 ஆயிரம் ரூபா பணத்தையும் பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் திருடிக்கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது.**

இத் துணிகரக் கொள்ளை வவுனியா, கோவில் புதுக்குளம் 10 ஆம் ஒழுங்கையிலுள்ள வீடொன்றில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முகத்தை கறுப்புத் துணியால் மறைத்துக் கட்டியவாறு வீட்டின்பின் ப்குதி வேலியைப் பிரித்து அதனூடாக வளவினுள் உள்வந்த திருடர்கள் வீட்டின் கதவை திறக்குமாறு தட்டியுள்ளனர்.

. அச்சமடைந்த வீட்டின் உரிமையாளர் கதவைத் திறக்க மறுத்த போது கூரிய ஆயு திருடர்கள் வீட்டின் கதவைத் திறக்குமாறு தட்டியுள்ளனர். அச்சமடைந்த வீட்டின் உரிமையாளர் கதவைத் திறக்க மறுத்தபோது கூரிய ஆயுதங்கள் சகிதம் கதவை உடைத்து உள்நுழைந்தனர்.

இவர்களை எதிர்த்து தடுக்க முயன்ற வீட்டின் உரிமையாளரை கத்தியால் வெட்டி காயப்படுத்தி அவரைத் சர்மாரியாகத் தாக்கினார்.

அதன் பின்னர் வீட்டினுள் நுழைந்து அங்கு வைக்கப்பட்டிருந்த 50 ஆயிரம் ரூபா பணத்தையும் காப்பு உள்ளிட்ட பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் திருடிக் கொண்டு தப்பிச் ீசென்றுள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டு அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (2)

## வீதியை செப்பனிடுமாறு மக்கள் கோரிக்கை

வவுனியா குருமன்காடு சந்தியில் இருந்து நகரம் வரை செல்லும் புகையிரத நிலைய வீதியை செப்பனிட்டு தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

புகையிரத நிலைய வீதியானது நீண்ட காலமாக செப்பனிடப்படாமல் மிக மோசமாக காணப்படுகின்றது.

வீதியை செப்பனிடுவதற்காக ஒரு வருடங்களுக்கும் மேலாக வீதியோரமாக கற்கள் குவிக்கப்பட்டு இன்றுவரை அக்கற்களுக்கு மேலாக மரங்கள் வளர்ந்துள்ள நிலையில் இவ்வீதிசெப்பனிடப்படாமலேயே உள்ளது. இதன் காரணமாக இவ்வீதியால் செல்வோர் தினமும் அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன் சிலர் விபத்துக்களையும் சந்திக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இவ் வீதியை செப்பனிட்டு தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2)

## அலங்காரஉற்சவம்

கிளிநொச்சி இயக்கச்சி திருவருள் மிகுமல்வில் கிருஷ்ணன் கோவில் மன்மத வருட அலங்கார உற்சவம் கடந்த 19 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும்.

இதில் காலை உற்சவம் காலை 9 மணிக்கும் மாலை உற்சவம் மாலை 6.30 மணிக்கும் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை வேட்டைத் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை சப்பரத் திருவிழாவும் நடைபெற்று எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் இடம்பெறும். மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெறும். தேர் உற்சவத்தன்று காலை 8.30 மணிக்கு சுவாமி தேரில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலிப்பார். தீர்த்தத் திருவிழா காலை 6.30 மணிக்கு நடைபெறும். (2-3)




கமலேஸ்வரன், தர்மலிங்கம் ஆகியோரை

## வடமாகாணசபை உறுப்பினர்களாக இணைக்க அனுமதி கோரி கடிதம்


(மல்லாவி)

வடமாகாணசபையின் உறுப்பினர்களாக இருந்த த.சித்தார்த்தன், வைத்தியகலாநிதி சி.சிவமோகன் ஆகிய இருவரும் நடை பெற்று முடி ந்த 8ஆவது பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டி நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

இந்நிலையில் இவர்களது வெற்றிடங்களுக்கு வடக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு விருப்பு வாக்குகளின் அடிப்படையில் அடுத்தடுத்த நிலைகளில் காணப்படும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த வல்லிபுரம் கமலேஸ்வரன், யாழ்பாணம் மாவட் டத்தைச் சேர்ந்த எஸ். தர்மலிங்கம் ஆகியோர் மாகாணசபை உறுப்பினர்களாக பதவியேற்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற மேற்படி வடக்குமாகாணசபை உறுப்பினர் பதவி விலகல் கடிதங்களை வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சி.வி. கே.சிவஞானத்திடம் கையளித்துள்ளார்.

அவைத்தலைவரினால் மேற்படி கடிதங்கள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆணையாளரின் பதில் கடிதம் கிடைக்கப் பெற்றதும் புதிய உறுப்பினராக இருந்து சுகயீனம் காரணமாக உயிரிழந்த கனகசுந்தர சுவாமியின் இடத்திற்கு முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.சிவநேசன் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-4-15)



கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபாய் என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு ஆலங்குளம் வேட்டையடைப்பு பகுதியில் பொதுமண்டபம் அமைக்கப்பட்டு வருகின்றது. பல்வேறு பிரதேசங்களிலும் அரசாங்கத்தின் 100நாட்கள் வேலைத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வரும் மேற்படி பொதுமண்டபம் இப்பகுதியிலுள்ள 400 குடும்பங்கள் பயனடையக்கூடிய வகையில் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உதவிக்கல்விப்பணிப்பாளர் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் இயங்கும் துணுக்காய், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு , வவுனியா தெற்கு ஆகிய கல்வி வலயங்களில் கடமை நிறைவேற்றும் பாடரீதியான உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிலவுவதாகவும் அவற்றினை நிரப்புவதற்கான தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் கோரியுள்ளார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் ஆரம்ப கல்வி, விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்குரிய உதவிக்கல்விப்பணிப்பாளர் வெற்றிடங்களும் மன்னார் கல்வி வலயத்தில் கணித பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் வெற்றிடமும் கிளிநொச்சி கல்வி வலயத்தில் ஆங்கில பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் வெற்றிடமும் முல்லைத்தீவு கல்வி வலயத்தில் முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் வெற்றிடமும் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் ஆங்கிலம் மற்றும் சமூக விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்குரிய உதவிக்கல்விப் பணிப்பாளர் வெற்றிடங்கள் நிலவி வருகின்றது.

இவற்றினை பூர்த்தி செய்வதற்கு இலங்கை ஆசிரியர் சேவை -1 அல்லது இலங்கை ஆசிரியர் சேவை -2-I ஐச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். இலங்கை ஆசிரியர் சேவை I இல் உள்ள ஆசிரியர் மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை 2-I உடன் சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர் ஆகியோரிடமிருந்து பொருத்தமான தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பங்களில் மட்டும் இலங்கை ஆசிரியர் சேவை-2-I இல் உள்ள ஆசிரியரிடம் இருந்து தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

இதேவேளை ஆகக்குறைந்த மூன்று வருடகாலமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பில் குறித்த பாடத்திற்கு தேவையென பிரசுரிக்கப்பட கல்வித் தகைமைகளை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

ஆரம்ப கல்வி மற்றும் முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் ஆரம்பக் கல்வித்துறை சார்ந்த பாடத்தில் குறைந்த பட்சம் 5 வருடங்கள் கற்பித்தல் அனுபவமுள்ள பயிற்றப்பட்ட ஆசிரியராக அல்லது அப்பாடத்துறை சார்ந்த பாடத்தில் மூன்று வருட கற்பித்தல் அனுபவத்துடனான பட்டதாரியாக இருத்தல் வேண்டும். தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு கல்வி அமைச்சு சுற்று நிருப இலக்கம் 2008/3 இற்கு அமைய எழுதுப்பரீட்சைப் புள்ளிகள், நேர்முகப்பரீட்சைப்புள்ளிகள் ஆகியவற்றின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்பட்டு கடமை நிறைவேற்றும் உதவிக்கல்விப்பணிப்பாளர் நியமனம் வழங்கப்படும்.


விண்ணப்பிக்க விரும்புவோர் அந்தந்த வலயக்கல்வி அலுவலகங்களில் விண்ணப்ப படிவத்தை பெற்று வலயக்கல்விப்பணிப்பாளரின் சிபார்சுடன் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பதிவுத்தபாலில் செயலாளர், கல்வி அமைச்சு, வடமாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
பாலசுப்பிரமணியம்
யோகச்சந்திரன்
(யோகண்ணா)

திதி:- 23/08/2015



மலர்வு
26.07.1945
உதிர்வு
03.09.2014

குடும்பத்தின் ஒளிவிளக்காய் அன்பின்
இருப்பிடமாய் நற்பண்புகளுடன் -நல்
வாழ்வுக்கு வழிகாட்டி எமக்காகவே
வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே
உங்கள் நினைவுடன்
என்றும் வாழ்கிறோம்.

(1544)

23.08.2015 நாளை ஞாயிற்
றுக்கிழமை எமது இல்லத்
தில் நடைபெறும் ஆத்ம சாந்
திப்பிரார்த்தனையிலும்
அதனைத் தொடர்ந்து நடை
பெறும்மதிய போசன நிகழ்விலும்
கலந்து கொள்ளுமாறு
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

கொத்தியால் ஒழுங்கை
வல்வெட்டித்துறை


தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1220



## இரக்க சுபாவம்!

...என் பெயர் ரங்கசாமி. பட்டணத்தில் எனக்கு ஐந்து கடைகள் உள்ளன. என் நண்பன் ஒருவனைப் பார்க்க வந்த வழியில், இப்படி ஜுரத்தில் படுத்து விட்டேன். என்னை நீதான் காப்பாற்றினாய்.

உன்னை நான் மறக்கவே மாட்டேன். உனக்கு என்னாலான உபகாரம் செய்வேன். இதுதான் என் முகவரி. நீ எப்போது வேண்டுமானாலும் என்னுடன் தொடர்பு கொண்டு உதவியைப் பெறலாம்," என்று கூறித் தன் முகவரியை ஒரு காகித துண்டில் எழுதிக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

இது நடந்து பத்து ஆண்டுகள் சென்றன. வசந்தியும் வளர்ந்து விவாக வயதை அடைந்து விட்டாள். அந்தப் பத்தாண்டு காலத்தில் சில சம்பவங்கள் நடந்தன. வசந்தியின் சிறயதாய் இறந்து விட்டாள். வசந்திக்கு அவள் தாத்தாவிடமிருந்து எதிர்பாராத விதமாய்க் கணிசமான சொத்துக்கள் கிடைத்தன.

ஒரு கோடை கால மத்தியானம் சாப்பிட்டு விட்டுத் தன் வீட்டுத் திண்ணைக்கு வந்தாள் வசந்தி. அங்கு எண்பது வயதான ஒரு கிழவர் முக்கி முனகியவாறே படுத்திருப்பதை அவள் கண்டாள்.

அவள் கிழவரை எழுப்பி கையைப் பிடித்து மெதுவாகத் தன் வீட்டிற்குள் அழைத்துப் போய் கட்டிலில் படுக்க வைத்தாள். அவருக்குக் குடிக்க நீர், மோர் கொடுத்து , "வயதான நீங்கள் இப்படி வெயிலில் வரலாமா?" என்று கேட்டாள்.

அவரும், "நான் ஒரு முக்கியமான வேலையாக இந்த ஊருக்கு வந்தேன். என் மகன் ரங்கசாமி பட்டணத்தில் ஐந்து கடைகளை வைத்துக் கொண்டு வியாபாரம் செய்து வருகிறான். இந்த ஊரில் அவனுக்கு வரவேண்டிய பணத்தை வசூலித்து வரும்படி என்னை அனுப்பினான். இன்று மாலைக்குள் நான் வசூலித்த இந்தப் பணத்தை அவனிடம் எப்படியாவது சேர்த்தாக வேண்டும். அப்படி செய்யாவிட்டால் என்னை வாட்டி வதக்கி விடுவான்," என்றார்.

அதைக் கேட்ட வசந்தி ஏதோ நினைத்துக் கொண்டவள் போல, உள்ளே போய் தன் பெட்டியிலிருந்து ஒரு காகிதத் துண்டை எடுத்து வந்தாள். அதனை அவள் அப்பெரியவரிடம் காட்டி," இதுதான் உங்கள் மகன் ரங்கசாமியின் முகவரியா?" என்று கேட்டான்.

பெரியவரும் அதனைப் பார்த்து விட்டு, "ஆமாம். இது எப்படி உனக்குக் கிடைத்தது?" என்று கேட்டார். வசந்தியும் பத்து வருடங்களுக்கு முன் நடந்ததை அவரிடம் கூறினாள்.

அவரும், "அப்படியா? சரி. இனி நான் சென்று வருகிறேன்," என்றார்.

"பெரியவரே! உங்கள் மகன் சரியாக கவனித்துக் கொள்வது இல்லை என்று உங்கள் பேச்சிலிருந்து தெரிகிறது. இந்த நிலையிலும் நீங்கள் உங்கள் மகனோடு இருந்துதான் தீரவேண்டுமா?" என்று கேட்டாள்.

பெரியவரும், "அப்படி ஒன்றும் இல்லை. ஆனால் பெற்ற மகனே, என்னை கவனிக்காத போது வேறு யார்தான் என்னைப் பார்த்துக் கொள்ளப் போகிறார்கள்?" என்று பெருமூச்சு விட்டவாறே கூறினார்.

"அப்படியானால் நான் சொல்வதைக் கேளுங்கள். இப்போது இங்கே சாப்பிட்டு விட்டு இளைப்பாறுங்கள். மாலையானதும் நானும் உங்களோடு பட்டணத்திற்கு வருகிறேன். உங்கள் மகனிடம் நல்ல விதமாய் சொல்லி உங்களைச் சரியாக கவனித்துக் கொள்ளும்படி சொல்லிப் பார்க்கிறேன். அவர் கேட்டால் சரி, இல்லாவிட்டால் நீங்கள் என்னோடு திரும்பி வந்து விடுங்கள். இங்கே நீங்கள் நிம்மதியாக இருக்கலாம். எனக்கும் ஒரு பெரியவரின் துணை கிடைத்து போலாகி விடும்," என்றாள்.

மாலையானதும் வசந்தியின் தந்தை வீட்டிற்கு வந்தார். பெரியவர் அவரிடம், வசந்தி தனக்குச் செய்த உபசாரத்தையும், அவள் யோசனையையும் கூறினார்.

"அவள் கூறியபடியே செய்யுங்கள். எல்லாம் நல்ல விதமாக நடக்கும்," என்றார் வசந்தியின் தந்தை.

பெரியவர் வசந்தியையும், அவளது தந்தையையும் அழைத்துக் கொண்டு பட்டணத்திலுள்ள தன் மகன் ரங்கசாமியின் வீட்டிற்குச் சென்றார். அங்கு அவர் ரங்கசாமியைப் பார்த்து சிரித்தவாறே," ரங்கசாமி இதோ பார். என் பேத்தியை அழைத்து வந்திருக்கிறேன்," என்றார்.

ரங்கசாமியும், வசந்தியைப் பார்த்து "என்னைத் தெரிகிறதா?" என்று கேட்டான்.

"ஓ! நன்றாக நினைவில் இருக்கிறதே," என்றாள் வசந்தி.

அப்போது அங்கு இருபத்தைந்து வயதான அழகான வாலிபன் ஒருவன் வந்தான்.

ரங்கசாமியும், "இவன் என் மகன் மூர்த்தி," என்றான்.

மூர்த்தியை, ரங்கசாமி போகச் சொல்லி விட்டு வசந்தியிடமும், அவள் தந்தையிடமும், "என் தந்தை ஒரு சிறு நாடகமே நடத்தி விட்டார். என்ன விழிக்கிறீர்களா? நான் பத்து வருடங்களுக்கு முன் வசந்தியைப் பார்த்தேன். அவளது அமைதியான போக்கும், பிறருக்கு இரங்கும் இயல்பும் கண்டு நான் மகிழ்ந்து போனேன். மூர்த்தி என் ஒரே மகன். என் மனைவியும் இரண்டு வருடங்களுக்கு முன் இறந்து விட்டாள். அவளும் வசந்தியை போன்ற இயல்புள்ளவளே. அவளைப் போன்ற மருமகளை அடைய வேண்டும் என்பதே என் ஆசை. இன்னமும் வசந்தி முன் போலவே இருக்கிறாளா? என்று என் தந்தை பரீட்சித்தார். அவர் திருப்தி அடைந்தே உங்கள் இருவரையும் அழைத்து வந்திருக்கிறார். வசந்திக்கு என் மகனைக் கல்யாணம் செய்து கொள்ள இஷ்டம்தானே? உங்கள் அபிப்ராயம் என்னவோ?" என்று கேட்டார்.

"உங்கள் அபிப்பிராயப்படி நடக்கலாம். வசந்தி! நீ என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார்.

அவள் பதில் எதுவும் சொல்லாமல் வெட்கித் தலைகுனிந்து கொண்டாள்.

ஒரு நல்ல முகூர்த்தத்தில் இருவருக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



## 08.2015 22 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1639 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியினர் நாயக்கர்களிடமிருந்து வாங்கிய நிலத்தில் மதராஸ் நகரத்தை (தற்போதைய சென்னை) அமைத்தார்கள்.
- 1642 - இங்கிலாந்தின் முதலாம் சார்ல்ஸ் ஆங்கில நாடாளுமன்றத்தை "துரோகிகள்" என வர்ணித்தான். ஆங்கில உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.
- 1717 - ஸ்பானியப் படைகள் சார்டீனியாவில் தரையிறங்கினர்.
- 1770 - ஜேம்ஸ் குக் தனது ஆட்களுடன் ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கரையை அடைந்தான்.
- 1780 - கப்டன் ஜேம்ஸ் குக்கின் கப்பல் (HMS Resolution) இங்கிலாந்து திரும்பியது. (ஹவாயில்குக் கொல்லப்பட்டான்).
- 1798 - ஐரியக் கிளர்ச்சிக்கு ஆதரவாக பிரெஞ்சுப் படைகள் அயர்லாந்தில் தரையிறங்கினர்.
- 1831 - வேர்ஜீனியாவில் நாட் டர்னர் தனது தாக்குதலை ஆரம்பித்தான். 50 வெள்ளையினத்தினரும், பல நூற்றுக்கணக்கான கறுப்பின அமெரிக்கர்களும் கொல்லப்பட்டனர்.
- 1848 - நியூ மெக்சிகோ ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கப்பட்டது.
- 1860 - பிரித்தானியக் கடற்படையின் உதவியுடன் கரிபால்டியின் படைகள் சிசிலியில் இருந்து இத்தாலியின் பெரும்பரப்பினுள் நுழைந்தனர்.
- 1864 - 12 நாடுகள் இணைந்து ஹென்றி டியூனாண்ட் தலைமையில் ஜெனீவாவில் செஞ்சிலுவைச் சங்கத்தை ஆரம்பித்தார்கள்.
- 1875 - சக்காலின் மற்றும் கூரில் தீவுகள் தொடர்பாக ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் சென் பீட்டர்ஸ்பேர்க்கில் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1910 - கொரியா-ஜப்பான் இணைப்பு ஒப்பந்தம் கைச்சாத்தானது. இரண்டாம் உலகப் போர் முடியும் வரையில் கொரியா ஜப்பானின் ஆட்சியின் கீழ் இருந்தது.
- 1911 - பாரிசில் திருடப்பட்ட மோனா லிசா ஓவியம் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1914 - முதலாம் உலகப் போர்: பெல்ஜியத்தில், பிரித்தானியாவும் ஜேர்மனியும் முதன் முதலில் நேரடியாகப் போரில் ஈடுபட்டனர்.
- 1926 - தென்னாபிரிக்கா, ஜோகானஸ்பேர்க்கில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1932 - தொலைக்காட்சி சேவையை முதன் முதலாக பிபிசி சோதித்தது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மன் படைகள் ரஷ்யாவின் சென் பீட்டர்ஸ்பேர்க்கை அடைந்தனர். லெனின்கிராட் மீதான முற்றுகை ஆரம்பமானது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனி மீது பிரேசில் போரை அறிவித்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் ஒன்றியம் ருமேனியாவைக் கைப்பற்றியது.
- 1949 - கனடாவில் 8.1 அளவு நிலநடுக்கம் பதிவாகியது.
- 1962 - பிரெஞ்சு அதிபர் சார்ல்ஸ் டி கோல் மீதான கொலை முயற்சி தோல்வியடைந்தது.
- 1972 - ரொடீசியா ஒலிம்பிக் அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டது.
- 1978 - சண்டினீஸ்டா படைகள் நிக்கராகுவாவின் தேசிய அரண்மனையைக் கைப்பற்றினர்.
- 1989 - நெப்டியூனின் முதலாவது கோள் வளையம் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1991 - சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பிராவ்தா பத்திரிகை மூடப்பட்டது.

### பிறப்புக்கள்

- 1877 - ஆனந்த குமாரசுவாமி, கலாயோகி (இ. 1947)
- 1904 - டங் சியாவுபிங், சீன அரசியல்வாதி (இ. 1997)
- 1920 - ரே பிராட்பரி, அமெரிக்க எழுத்தாளர் (இ. 2012)

### இறப்புகள்


- 1485 - இங்கிலாந்தின் மூன்றாம் ரிச்சர்டு (பி. 1452)
- 1967 - கிரிகோரி குட்வின் பிங்கஸ், அமெரிக்க உயிரியலாளர் (பி. 1903)
- 2011 - [illegible] (பி. 1950)
- 2014 - யு. ஆர். அனந்தமூர்த்தி, கன்னட எழுத்தாளர் (பி. 1932)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 18.08.2015~17.09.2015

**தொய்வடைந்த பணி இனி தொடர்ந்து நடைபெறும்! மற்றவர்களுக்கு மனவருத்தம் ஏற்படக்கூடாது என்று நினைக்கும் துலாம் இராசி நேயர்களே!**



ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்திலேயே சனி உங்கள் ராசியில் சஞ்சரித்தாலும் வக்ர இயக்கத்தில் மாதத்தின் மையப் பகுதியில் விருச்சிகத்திற்கு மாறப்போகின்றார். எனவே, சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் துரிதமாக நடைபெறும். பாதியில் நின்றபணி மீதியும் தொடரும் விதத்தில் கிரகங்களின் சஞ்சார நிலை உள்ளது. இலாப ஸ்தானம் பலம் பெறும் மாதமிது.

இலாபாதிபதி, ராசியாதிபதி, சகாய ஸ்தானாதிபதி, விரயாதிபதி ஆகிய நான்கும் ஒன்று கூடி இலாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். வரவு செலவுகள் திருப்திகரமாக இருக்கும். வருமானப் பற்றாக்குறை அகலும். திறமையானவர்களின் ஆலோசனை உங்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும். தெய்வ நம்பிக்கையை அதிகம் பெற்றிருக்கும் நீங்கள் சனிக்குரிய ஸ்தலத்திற்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது. விலகிச் செல்லும் சனியை விரும்பி வழிபட்டால் வளமும் கிடைக்கும், நலமும் கிடைக்கும். நல்ல காரியமும் இல்லத்தில் நடைபெறும்.

6 இல் கேதுவும், 12 இல் ராகுவும் வீற்றிருப்பதால் பயணங்கள் அதிகரிக்கும். ஒரு சிலருக்கு வீடு மாற்றங்களும், நாடு மாற்றங்களும் உருவாகலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இலாகா மாற்றங்கள் எதிர்பார்த்தபடி வந்து சேரும். அதன் விளைவாக வேலைப்பளு குறையும். விரும்பியபடியே சலுகைகள் உங்களுக்கு கிடைக்கும். அது அரசு வழியில் இருக்கலாம். அல்லது அலுவலகப் பணி மூலம் கிடைக்கலாம்.

தனாதிபதி செவ்வாய் நீச்சம் பெற்றிருப்பதால் ஒரு சில சமயங்களில் பணப்பற்றாக்குறை ஏற்படும். வாங்கியதைக் கொடுக்க முடியவில்லையே, கொடுத்ததை வாங்கமுடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள். ஒரு சிலருக்கு கைமாற்று வாங்கி செலவழிக்கும் சூழ்நிலை உருவாகலாம். எனவே, அங்காரக வழிபாட்டை முறையாக மேற்கொண்டால் தங்கு தடை இல்லாமல் தன வரவு வந்து கொண்டே இருக்கும்.

**வக்ர புதனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 21 ஆம் திகதி கன்னி ராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். மீண்டும் செப்டம்பர் 15 ஆம் திகதி சிம்மத்திற்கு வக்ரமாக செல்கிறார். 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல.

தந்தை வழி உறவில் விரிசலகள் ஏற்படலாம். அன்னிய தேசம் செல்லப் போட்ட திட்டம் அரைகுறையாக நிற்கும். வாகன பழுதுச் செலவுகள் அதிகரிக்கிறதே என்று கவலைப்படுவீர்கள். பழைய வாகனங்களை கொடுத்து விட்டுப் புதிய வாகனங்கள் வாங்கும் எண் ணம் மேலோங்கும். வாழ்க்கைத் துணை வழியே இருந்த பிரச்சினை ள் அகலும்.

தொழில் தொடங்கும் முயற்சிக்கு நண்பர்கள் கைகொடுத்து உதவுவர். பாகப்பிரிவினையில் மூன்றாமவர் தலையீட்டால் தடைகள் அதிகரிக்கலாம்.




**கடக சுக்ரனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 24 ஆம் திகதி சுக்ரன் வக்ர இயக்கத்தில் கடக ராசிக்குச் செல்கிறார். ராசிநாதன் 10 இல் சஞ்சரிக்கும் இந்த நேரம் தொழில், உத்தியோகத்தில் இலாபம் எதிர்பார்த்தபடி கிடைக்கும். கிளைத் தொழில் தொடங்கும் வாய்ப்பு ஒரு சிலருக்கு வந்து சேரும். புதிய ஒப்பந்தங்களை கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். பொன், பொருள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும்.

**விருச்சிக சனியும், சிம்ம செவ்வாயும்!**

செப்டம்பர் 5 ஆம் திகதி விருச்சிகத்தில் சனி சஞ்சரிக்கப் போகிறார். அதன்பிறகு செப்டம்பர் 17 ஆம் திகதி சிம்மத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். வீடு கட்டும் அல்லது வாங்கும் முயற்சி வெற்றி தரும். உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவர். செவ்வாய் பெயர்ச்சிக்குப் பிறகு வங்கிச் சேமிப்பு உயரும். வளர்ச்சி கூடும். வாங்கல்- கொடுக்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். கடல் தாண்டி படிக்கச் செல்லும் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பீர்கள். அரசு வழிச் சலுகைகள் எதிர்பார்த்தபடி கிடைக்கும். இம்மாதம் திருமால் வழிபாடு திருப்தி அளிக்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் உங்களுக்கு ஒரு இனிய மாதமாகும். வங்கிச் சேமிப்பு உயரும். வளர்ச்சி கூடும். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். இலாப ஸ்தானத்தில் லாபாதிபதி வீற்றிருப்பதால் எதிர்பார்த்த இலக்கை அடைய இயலும். மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக்கசப்பு மாறும். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். குழந்தைகளின் மூலமாக உதிரி வருமானம் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வும், உத்தியோக உயர்வும் எதிர்பார்த்தபடி கிடைக்கும். சனி வழிபாடு சந்தோஷம் வழங்கும்.

# தொய்வடைந்த பணி தொடர்ந்து நடைபெறும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**வங்கிச் சேமிப்பு உயரும் நேரம்! திறமையை வெளிக்காட்டி அருமையாக வாழ்க்கை நடத்தும் விருச்சிக இராசி நேயர்களே!**



ஆவணிமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இலாப ஸ்தானத்தில் இராகு சந்திரனோடு இணைந்து சஞ்சரிக்கின்றார். தொழில் ஸ்தானாதிபதி பலம் பெற்று இலாபாதிபதி புதனுடன் குரு மற்றும் சுக்ரனும் இணைந்து சஞ்சரிக்கின்றார்.

எனவே இந்த மாதம் ஒரு இனிய மாதமாகும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவுவர். வெற்றிச் செய்திகள் வீடு தேடி வந்துகொண்டே இருக்கும்.

இராசிநாதன் செவ்வாய் கடகத்தில் சஞ்சரிக்கின்றார். 6-க்கு அதிபதியாக விளங்கும் செவ்வாய் நீச்சம் பெறுவதும் யோகம்தான். தொழிலில எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். பூமி யோகம் உண்டு. புதிய நண்பர்களின் ஒத்துழைப்போடு கிளைத் தொழில்கள் செய்ய முன் வருவீர்கள்.

அரசுவழிச் சலுகைகள் எதிர்பார்த்தபடியே வந்து சேரும். திட்டமிட்ட காரியத்தை திட்டமிட்டபடியே நடத்தி முடிப்பீர்கள். தெய்வத் திருப்பணிகளிலும் ஆர்வம் காட்டுவீர்கள்.

ஏழரைச் சனியின் ஆதிக்கம் இப்பொழுது நடைபெறுவதால் வாழ்வை வளப்படுத்த வழிபாடுகள் உங்களுக்குத் தேவை. அந்த அடிப்படையில் சனிக் கிழமை தோறும் ஆனை முகப்பெருமானையும், அனுமனையும் வழிபட்டு வருவது நல்லது.

இம்மாதம் வரும் விநாயகர் சதுர்த்தியன்று விரதமிருந்து கணபதியை வழிபட்டால் உங்கள் கனவுகள் நனவாகும்.

பொதுவாகவே பத்தாமிடம் வலுவடையும் நேரத்தில் பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை உயரும். பாராட்டும், புகழும் கூடும். தக்க சமயத்தில் தலைமைப் பதவிகள் கிடைக்கும். தனவரவும் திருப்திகரமாகவே இருக்கும். புத-சுக்ர யோகம் இருப்பதால் ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக் கவனம் செலுத்துவீர்கள்.

**வக்ர புதனின் சஞ்சாரம்!**

புதன் ஆகஸ்ட் 2 ஆம் திகதி கன்னி ராசியில் வக்ரம் பெறுகிறார். மீண்டும் செப்ரெம்பர் 15 ஆம் திகதி சிம்மத்திற்கு வக்ரமாகச் செல்கிறார். புதன் உங்கள் ராசிக்கு அஷ்டமாதிபதியாகவும், இலாபாதிபதியாகவும் விளங்குகிறார். அவர் வக்ரம் பெறும் பொழுது தேவைக் கேற்ற பணம் வந்துகொண்டேயிருக்கும். திடீர் செலவுகளும் வந்து சேரலாம். சென்ற மாதத்தில் வசூலாகாத பாக்கிகள் இப்பொழுது வசூலாகும்.

உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்போடு உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு முன்னேற்றம் கிடைக்கும். அயல்நாட்டிலிருந்து அழைப்புகள் வந்து சேரலாம்.

நிலையான வருமானத்திற்கு வழி அமைத்துக் கொள்ள நீங்கள் செய்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்கிச் சேர்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடக சுக்ரனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 21 ஆம் திகதி சுக்ரன் வக்ர இயக்கத்தில் கடக ராசிக்கு செல்கிறார். 12-க்கு அதிபதி வக்ரம் பெறும் பொழுது பயணத்தால் பலன் கிடைக்கும். புதிய வாகன சேர்க்கைக்கு அஸ்திவாரமிடுவீர்கள். வருமானம் திருப்திகரமாக இருக்கும். தந்தைவழி ஒத்துழைப்பு கிடைக்கும். வாழ்க்கைத் துணைக்கு செய்த உத்தியோக ஏற்பாடு கைகூடி வளர்ச்சியைக் கூட்டும்.




**விருச்சிக சனியும், சிம்ம செவ்வாயும்!**

செப்டம்பர் 5 ஆம் திகதி விருச்சிகத்தில் சனி சஞ்சரிக்கப் போகிறார். அதன்பிறகு செப்டம்பர் 17 ஆம் திகதி சிம்மத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக சுப விரயங்கள் அதிகரிக்கும். சொத்துக்களால் இலாபம் ஏற்படும். பூர்வீக சொதுக்களில் வீடுகட்டிக் குடியேறும் வாய்ப்பு ஒரு சிலருக்கு உண்டு. செவ்வாய் சிம்மத்தில் சஞ்சரிக்கும் பொழுது புதிய ஒப்பந்தங்கள் வந்து கொண்டேயிருக்கும். நூதனப் பொருள் சேர்க்கை உண்டு. உடன் பிறப்புகளின் ஒத்துழைப்பு கூடுதலாகவே இருக்கும். வாடகைப் பாக்கிகள் வசூலாகும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கலாம். இம்மாதம் சதுர்த்தியன்று விநாயகப் பெருமானை வழிபடுவதோடு, செவ்வாய் தோறும் முருகப் பெருமானை வழிபட்டு வாருங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் உங்களுக்கு ஒரு இனிய மாதமாகும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். புதிய தொழில் தொடங்கும் எண்ணம் உருவாகும். தாய்வழி ஆதரவு உண்டு. உடன்பிறப்புகளும் உதவிக்கரம் நீட்டுவர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வு எதிர்பார்த்தபடி அமையும். கணவன்-மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். குழந்தைகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் ஆபரணங்கள் வாங்கி அழகுபார்ப்பீர்கள். செல்வ நிலை உயர கற்பக விநாயகரை கைதொழுது வழிபட்டு வருவது நல்லது. சதுர்த்தி விரதம் சந்தோஷம் வழங்கும்.

# வெற்றிச் செய்திகள் வீடு தேடி வந்துகொண்டே இருக்கும்!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூழலுக்கியைவான பசுமைத்தொழில்நுட்பங்கள்- 58

# வடபகுதியில் ஓர்க்கிட் வளர்க்கும் தொழிற்றுறைக்கான வாய்ப்பு!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

வடபகுதியின் அபிவிருத்திக்குள்ளே மாற்றங்களை உள்வாங்கி இன்னும் பலவற்றை இனங்கண்டு அவற்றையும் உள்வாங்கும் தருணத்தில் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். இங்கே பல்வேறு விதமான தொழிற்றுறைக்கான அத்திவாரம் பலமாக இடப்படல் வேண்டும்.

போர் நடந்து 6 வருடங்கள் கடந்துவிட்டன. வாழ்வாதாரத்தை ஏங்கி நிற்கும் மக்களுக்கு வருமானம் தரும் தொழிற்றுறை முழுமையாக இன்னமும் இனங்காணப்படவில்லை. வாரிவழங்கும் நிறுவனங்களின் ஆதரவு தொடர்ந்து இருக்கப் போவதில்லை. இலங்கையை நடுத்தர வருமானம் உள்ள நாடாக பட்டியலிட்டதிலிருந்து எமக்காக வருகின்ற நிதியின் அளவு இனி மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உலகளாவிய அரசசார்பற்ற நிறுவனங்களிலிருந்து கிடைக்கும். தொடர்ந்தும் எமக்கு இலவசமாக நிதியையோ அல்லது அது சார்ந்த உதவிகளோ மட்டுப்படுத்தப்பட வாய்ப்புக்கள் அதிகமாகவே இருக்கின்றது.

எனவே தான் நாம் எமது மக்களை சுய தொழில் சார்ந்து உள்வாங்குவதற்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

தனியார் தொழில்நிலையங்களின் தட்டுப்பாடு இவ்வகையான செயற்பாடுகளுக்கு தடையாக இருக்கின்றது என கூறப்பட்டாலும் அவ்வாறான சுய தொழில் முனைப்புக்கு அடித்தளமிடும் நடவடிக்கைகளில் அனைத்து திணைக்களங்களும் உள்வாங்கப்படல் வேண்டும்.

தொழில்முனைப்புக்கான புதிய விடயங்கள் கருத்திலெடுக்கப்படுதல் காலத்தின் கட்டாயமாகும்.

குறிப்பாக சுற்றுலாத்துறையின் விருத்திக்கு முன்னுரிமை கொடுக்கப்படல் நல்லது.

இதன்போது சுற்றுலாத்துறையுடன் இணைந்த அனைத்து தொழிற்றுறையையும் விருத்தி செய்யவும் அதன்மூலம் தொழில் வாய்ப்பினை பெருக்கவும் முடியும்.

இதற்காக சுற்றுலா மையங்களை வடபகுதியெங்கும் இனங்கண்டு அவற்றை விருத்திச்செய்ய வழிசெய்தல் வேண்டும். அந்தந்த பகுதி சார்ந்த மக்களுக்கு இந்த சுற்றுலா துறையின் விருத்தியுடன் வேலைவாய்ப்பை அதிகரிக்க ஆவன செய்தல் வேண்டும்.

மக்களுக்கு தொழிலை கற்றுக்கொடுத்து, வேண்டிய பயிற்சியும் கொடுத்து அவர்களை தொழில்செய்வோர் ஆக மாற்றுதல் அவசியமாகும்.

சுயதொழில் வாய்ப்புக்களை அதிகம் ஏற்படுத்திக் கொடுப்பது இது சார்ந்த அரசமைப்பின் கடமையாகும். அவரவர் திறனுக்கேற்ப இவ்வாறான தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்க முடியும். பல்துறை திறன் விருத்திக்கான பயிற்சியினை கொடுத்து அவர்களை வினைத்திறனான ஊழியர்களாக உருவாக்க முடியும்.

இவ்வகையில் கவனத்தை யீர்ப்பதாக பூக்களை உற்பத்தி செய்யும் தொழில் வாய்ப்பினைக் குறிப்பிடலாம்.

வடபகுதியில் காணப்படும் பனையில் ஒட்டியாக காணப்படும் ஓர்க்கிட்டு தாவரத்தின் தன்மையையும் சிறப்பையும் அவதானித்தன் காரணமாக அதனது சிறப்பியல்புகளை அறிவதற்கான ஆய்வு விவசாய உயிரியல் துறையில் அதன் சிறப்பு மாணவன் சஞ்ஜீவினால் நடத்தப்பட்டது. வடபகுதியிலுள்ள பனையிலுள்ள ஓர்க்கிட்டுக்கள் காணப்படும் இடங்களை இனங்கண்டதுடன் அவற்றின் இயல்புகள், பூக்கும் தன்மை, அவற்றை இனப்பெருக்கம் செய்யும் வழிமுறைகள் என பலவற்றை ஆய்ந்தறிந்துள்ளார்.

இவ்வாறாக காணப்பட்ட ஓர்க்கிட்டு பனையில், தென்னையில், பூவரசில், கொய்யாவில் என பனை மட்டுமன்றி இருவித்திலை தாவரங்களிலும் வளர்ந்திருப்பதனை காணக் கூடியதாயிருக்கின்றது. மேலொட்டியாக வாழும் வல்லமை கொண்டிருப்பதனால் இந்த ஓர்க்கிட்டுக்களை பயன்படுத்தி அலங்காரம் செய்வதற்கு இன்னும் ஆய்வினை முடுக்கிவிட வேண்டியுள்ளது.

மேலும் இவ்வகை ஓர்க்கிட்டினை பயன்படுத்தி பெரிதான அழகான வேறுபட்ட நிறங்களைக்கொண்ட ஓர்க்கிட்டுக்களையும் உற்பத்தி செய்யும் தொழில் நுட்பத்தினையும் கண்டுபிடித்தல் நல்லது. ஆய்வுக்கான கருப்பொருளாக இதனை ஆராய்ச்சியாளர்கள் முன் முன்வைக்கின்றோம். எங்களூர் வளங்களை சரியாக இனங்கண்டு அவற்றை பயன்படுத்தும் வழிமுறைகளை நாம் கண்டறிதல் நன்று.

இவற்றுக்கும் மேலாக இவ்வகையான ஓர்க்கிட்டுக்களின் வேர்களில் மைக்கோறைசா எனப்படும் ஒருவகை பூஞ்சணத்துடனான சிறந்த ஒன்றிய வாழ்வு இருப்பதனை ஆய்வின் மூலம் கண்டறிந்துள்ளோம். அதன் மூலம் இவற்றின் சிறப்புத்தன்மையினை அறியமுடிகின்றது. வரட்சியான காலநிலையிலும் பூக்களை உற்பத்திசெய்வதற்கு இவ்வகை பூஞ்சணங்களின் ஒன்றிய வாழ்வினை பயன்படுத்த முடியும். இதுபற்றி இன்னும் அதிகம் ஆராய வேண்டியுள்ளது. எங்களூரில் உள்ள இவ்வகை அரிய தாவரங்களை நாம் வினைத்திறனான முறையில் அவற்றின் சிறப்பியல்புகளை முழுமையாக பயன்படுத்தினால் இத் தொழிற்றுறையை மேலும் விருத்தியடைய வைக்கலாம்.

இது சுய தொழில் முயற்சிக்கு என்றும் கைகொடுக்கும் நல்லதொரு உதாரணமாகும். வடபகுதியெங்கும் காளான்கள் போல பல உணவகங்கள், மணமேடையுடனான மண்டபங்கள், சுற்றுலா விடுதிகள் உருவாகின்றன. இவ்வாறானதொரு நிலையில் எங்களது கலாசாரம், பண்பாடு விழுமியங்களுக்கு ஏற்புடையதாக சுற்றுலாத் துறையை விருத்தி செய்வது அவசியமானதும் காலத்தின் கட்டாயமானதுமாகும். இவை தவிர ஏனைய பூக்கும் தாவரங்களையும் உற்பத்திசெய்ய முடியும். அதற்கான காலம் கனிந்திருக்கின்றது. சரியாக பயன்படுத்திக்கொள்வார்களா?





## இனியொரு பசுமைப் புரட்சிக்கு.. 55

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.ம.சு.கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பற்றிய சட்டமா அதிபரின் விளக்கத்தை வெளியிட முடியாது

## தேர்தல்கள் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பற்றிய சட்டமா அதிபரின் விளக்கத்தை வெளிப்படுத்த முடியாது என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பதவி குறித்து சர்ச்சை நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளராக சுசில் பிரேமஜயந்த கடமையாற்றி வந்தார்.

எனினும் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற சில தினங்களுக்கு முன்னதாக, அந்தப் பதவிக்கு பேராசிரியர் விஸ்வ வர்ணபாலவை ஜனாதிபதி நியமித்ததுடன், சுசில் பிரேமஜயந்தவை பணி நீக்கியிருந்தார்.

சுசில் பிரேமஜயந்தவும் விஸ்வ வர்ணபாலவும் தேசியப் பட்டியல் உறுப்பினர்களைப் பெயரிட்டு தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்க முயற்சித்தனர்.

இதனால் பெரும் சர்ச்சை நிலைமை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த விடயம் குறித்து தேர்தல்கள் ஆணையாளர் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் உதவியை நாடியிருந்தார்.

இதேவேளை சட்டமா அதிபர் திணைக்களம் எவ்வாறான ஆலோசனை வழங்கியது என்பது குறித்து பகிரங்கப்படுத்த முடியாது என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேசியப் பட்டியல் உறுப்பினர் விபரங்கள் தொடர்பில் இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களுக்கான ஒழுக்க கோவையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணையாளரான தமக்கு சட்ட மா அதிபரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட விளக்கத்தை பகிரங்கப்படுத்த அதிகாரம் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## சுசில் பிரேமஜயந்தவிற்கு எதிராக தென்மாகாணசபை உறுப்பினர் மனு

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்தவிற்கு எதிராக நேற்று முன்தினம் தென் மாகாணசபை உறுப்பினர் எச்.ஏ.பியசேன மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து எதேச்சாதிகாரமாக சட்டவிரோதமான முறையில் தம்மை நீக்கியதாக குற்றம் சுமத்தி மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவில் சுசில் பிரேமஜயந்த, தென் மாகாண சபை செயலாளர் கே.எல்.தயாரட்ன மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது மாத்தறை மாவட்டத்தில் சுயாதீனமாக போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்திருந்தேன். பின்னர் கட்சி யாப்பு விதிகளை மீறி செயற்பட்டதாகவும் இதனால் கட்சி உறுப்புரிமை இரத்து செய்யப்படுவதாகவும் கூறி கூட்டமைப்பின் முன்னாள் பொதுச செயலாளர் கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தார்.

எனக்கு எதிராக குற்றப் பத்திரிகையோ ஒழுக்காற்று விசாரணையோ நடத்தாது இவ்வாறு கட்சி உறுப்புரிமை இரத்து செய்யப்பட்டுள்ளது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 120 |
| தக்காளி | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 |
| கோவா | 80 | 80 | 90 |
| கரட் | 150 | 160 | 160 |
| பூசணி | 40 | 60 | 40 |
| புடோல் | 30 | 60 | 40 |
| வாழைக்காய் | 80 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 120 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 70 | 40 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 |
| பயற்றங்காய் | 150 | 80 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 |
| பீற்றூட் | 50 | 60 | 50 |
| கறிமிளகாய் | 120 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 80 | 90 |
| போஞ்சி | 200 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 70 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 50 | 200 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 140 | – | 120 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 160 |
| முள்ளங்கி | 30 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 20 |

## facebook (f) :.பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 466

Search for people, places and things Nagendram Home

பிரணவன் விவேகானந்தன்




சுஜி செல்வா




உகந்து உகந்தன்





சஞ்சீவ் மரியதாஸ்




ஸ்ரீகாந்தன் நிதுஷன்




ரகு ரகுதரன்




நீங்கள் பார்த்த :.பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தரமான உரிமையுடன் கூடிய வாழ்வை பெற்றிட பாடுபடுவோம்

## சிறீதரன் எம்.பி தெரிவிப்பு


(கிளிநொச்சி)

எமது மக்களுக்கான நிரந்தரமான சுபீட்ச மான உரிமையுடன் கூடிய வாழ்வை பெற்றுக்கொடுக்க நாம் தொடர்ந்தும் பாடுபடுவோம் என வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர்ந்து இலண்டனில் வசிக்கின்ற கருணையுள்ளம் கொண்ட உறவினர்களினால் கிளிநொச்சி மாணவர்களின் கல்வி வளர்ச்சியை நோக்காகக் கொண்டு 30 துவிச்சக்கரவண்டிகள் சிறிதரன் எம்.பி ஊடாக வழங்கப்பட்டது.

துவிச்சக்கர வண்டிகளை வழங்கிவிட்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த காலங்களில் எமதுமாவட்டமக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தொடர்ந்து உதவிகளை இவர்கள் வழங்கியுள்ளனர்.



அந்த வகையில் தேர்தலின் பின்னரான எமது பயணத்தில் எமது மக்களின் அபிவிருத்திகள் நோக்கிய எமது பணியில் முதன்முதலாக இவர்கள்கைகொடுக்கும் விதமாக மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் தந்த அமோக வெற்றி மக்களின் உரிமை மற்றும் அபிவிருத்தி ஆகிய இரண்டு விதமான நோக்கங்களுக்காக நாம் பயன்படுத்த உள்ளோம்.

எமது மக்களை பொருளாதார ரீதியில் தூக்கிவிடுகின்ற பணியை எமது கட்சி எதிர்வரும் காலங்களில் பிரதானமான திட்டங்கள் வகுத்து செயற்படும்.

அதேவேளை எமது மக்களுக்கான நிரந்தரமான சுபீட்சமான உரிமையுடன் கூடிய வாழ்வை பெற்றுக்கொடுக்க நாம் தொடர்ந்தும் நாம் பாடுபடுவோம்.

தாயகத்தில் வாழும் மக்களும் புலம் எங்கள் சொந்தங்களும் ஓரணியில் செய்கின்ற பயணத்தின் வெற்றியாக எமது எதிர்காலம் அமையும் என தெரிவித்தார். (2)

# பொய் கூறி முதியவரிடம் பெற்ற பணம் மீளக் கிடைக்கப்பெற்றது

(முள்ளியவளை)

முள்ளியவளை பொலிசாருக்கு இலஞ்சம் கொடுக்க வேண்டுமென பொய் கூறி பொது மகன் ஒருவரிடமிருந்து ஒரு தொகைப் பணத்தினை ஏமாற்றிப் பெற்றுக்கொண்ட இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் முள்ளியவளை பொலிசாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது, கடந்த வாரம் முதியவர் ஒருவர் மரக்காலை ஒன்றிலிருந்து பற்றுச் சீட்டுடன் கொள்வனவு செய்யப்பட்ட கதவு, யன்னலிற்கான நிலைத் தடிகள் சிலவற்றை தனது பட்டறையில் பறிக்குமாறு கூறி ஒரு அபான்ஸ் மோட்டார் வாகனத்தில் ஏற்றி அனுப்பிவிட்டு தவறுதலாக வாகன உரிமையாளரிடம் பற்றுச் சீட்டை வழங்காது தனது சொந்த அலுவல்கள் சிலவற்றை செய்துவிட்டு வீடு திரும்புவதற்கு இடையில் அபான்ஸ் வாகனத்தை பிரதான வீதியில் வைத்து வழிமறித்து சோதனை செய்த பொலிசார் பற்றுச் சீட்டைக் கொண்டு செல்லாத காரணத்தினால் வாகனத்தினை மரந்தடிகளுடன் பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்றனர்.

பின்னர் நடந்தவற்றை அறிந்துகொண்ட முதியவர் பற்றுச் சீட்டுடன் பொலிஸ் நிலையம் செல்லவே அதனை உறுதிப்படுத்திய பொலிசார் அபான்ஸ் வாகனத்தையும் மரந்தடிகளையும் விடுவித்தனர்.

இதன் பின்னர் அபான்ஸ் உரிமையாளராகிய இளைஞர் குறித்த முதியவரிடம் தான் பொலிசாருக்கு ஐயாயிரம் ரூபா கொடுத்துத்தான் விடுவித்ததாகவும் அந்தப் பணத்தினை தருமாறும் கோரி நெருக்குதல் கொடுத்த காரத்தினால் குறித்த முதியவர் தன்னிடம் நான்காயிரம் ரூபா மட்டுமே இருப்பதாகக் கூறி அந்தப் பணத்தினை அவரிடம் வழங்கியுள்ளார்.

இவ்விடயம் முள்ளியவளை விசேட புலனாய்வுப் பொலிசாருக்கு தெரியவரவே விடயத்தை முள்ளிவளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து நேற்று முன்தினம் குறித்த இளைஞனையும் வயோதிபரையும் பொலிஸ் நிலையம் அழைத்து பொறுப்பதிகாரி விசாரித்துள்ளார்.

குற்றத்தை ஒப்புக்கொண்ட இளைஞரிடமிருந்து நான்காயிரம் ரூபாவினை முதியவரிடம் பெற்றுக்கொடுத்ததுடன் குறித்த இளைஞன் ஏற்கனவே பிடிவிறாந்து உத்தரவிற்குட்பட்டவர் என்பதால் இன்று சனிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் முள்ளியவளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரமேஸ் இரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார். (2-302)

# எண்ணெய் காப்பு சாத்தலும் கும்பாபிஷேகமும்

(முள்ளியவளை)

முள்ளியவளை ஸ்ரீகல்யாண வேலவர் தேவஸ்த்தான மகாகும்பாபிஷேகத்தையொட்டிய எண்ணெய்க் காப்பு சாத்தல் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6 மணி தொடக்கம் மறுநாள் புதன்கிழமை பிற்பகல் 4 மணிவரை நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணி முதல் 9.20 மணி வரையுள்ள சுப வேளையில் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளானர். (2-302)




# புகையிரத கடவை கேற்றை மோதித் தள்ளியது பட்டா

## மயிரிழையில் உயிர் தப்பினார் சாரதி

(வவுனியா)

வவுனியா, வைரவபுளியங்குளம் புகையிரதக் கடவையை டிமோ பட்டா ரக வாகனம் மோதித் தள்ளியதில் புகையிரத கடவை கேற் சேதமடைந்துள்ளது.



இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் வவுனியா நகரில் இருந்து டிமோ பட்டா ரக வாகனம் வைரவபுளியங்குளம் நோக்கி பயணித்தது. இதன் போது கொழும்பில் இருந்து யாழ் நோக்கி புகையிரதம் செல்வதற்காக அவ் வீதியில் அமைக்கப்பட்டிருந்த புகையிரகக் கடவைக் கேற் பூட்டப்பட்டிருந்தது.

வேகமாக பயணித்த பட்டா ரக வாகனம் கேற் சிக்னல் தாமதமாக கிடைத்ததால் நேரடியாக கேற் ஊடாக பயணித்த போது கேற் பூட்டப்பட்டுள்ளது.

இதன்போது மறுமுனை யில் இருந்த கேற்றை உடைத்துக் கொண்டு டிமோ பட்டா ரக வாகனம் வெளியேறியது. குறித்த வாகனம் புகையிரதக் கடவையை விட்டு வெளியேறியதால் எவருக்கும் உயிரிழப்பு ஏற்படவில்லை.

தகவலறிந்த சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா போக்குவரத்து பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டனர். அத்துடன் புகையிரதக் கேற்றினை திருத்தும் பணியும் உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டது.

இதேவேளை இப்பகுதியில் முன்னரும் பல தடவைகள் புகையிரதக் கேற்றை உடைத்துக்கொண்டு வாகனங்கள் சென்ற சம்பவங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் நேற்றுமுன்தினம் ஒட்டுசுட்டானிலுள்ள அன்பு இல்லம் மற்றும் முள்ளியவளையிலுள்ள பாரதி இல்லம் ஆகியவற்றிற்கு 90 ஆயிரம் ரூபா நிதி அன்பளிப்பு செய்யப்பட்டது.

இந்நிதியானது கனடா வாழ் புலம்பெயர் உறவினர்களால் அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# குடும்பங்களின் வாழ்வாதாரத் தொழில் மேம்பாட்டிற்கு துவிச்சக்கரவண்டிகள்

(மல்லாவி)

ஐ.டி.எம். நிறுவனத்தின் அனுசரணையுடன் துணுக்காய்ப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராமங்களில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கும் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டின்கீழ் வாழ்கின்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 10 பயனாளி வாழ்வாதார தொழில் மேம்பாட்டிற்காக துவிச்சக்கரவண்டி வழங்கப்படவுள்ளதாக ஐ.டி.எம். நிறுவனத்தலைவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

துணுக்காய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட அனிஞ்சியன் குளம், ஆலங்குளம், உயிலங்குளம் ஆகிய கிராமங்களில் வசிக்கின்ற வறுமைக்கோட்டின் கீழுள்ள கணவனை இழந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கும் மற்றும் போரினால் கணவனை இழந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 10 குடும்பங்களுக்கு தொழில் முயற்சியினை மேம்படுத்தும் பொருட்டு 10 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்வுள்ளன.

மேற்படி பயனாளிகள் தெரிவு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

மிக விரைவில் இவர்களுக்கான துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-15)

# மக்கள் வழங்கிய வாக்குகள் அபிலாசைக்குக் கிடைத்த வெற்றி

## வடமாகாணசபை உறுப்பினர் இந்திரராசா தெரிவிப்பு

(வவுனியா)

நடைபெற்று முடிந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு மனச்சாட்சியுள்ள மக்கள் வழங்கிய வாக்குகள் அனைத்தும் தமிழ் தேசியத்திற்கும் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கும் மனித மாண்பிற்கும் கிடைத்த வெற்றியாகும் என வடமாகாணசபை உறுப்பினர் இ.இந்திரராசா தெரிவித்துள்ளார்.

தேர்தல் வெற்றி குறித்து அவர் மேலும் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்னி தேர்தல் மாவட்டத்தில் ஆறு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 252 வேட்பாளர்கள் போட்டியிட்ட நிலையில் அள்ளி வீசப்பட்ட ஆசை வார்த்தைகளுக்கும் பொருட்களுக்கும் பணத்திற்கும் விலை போகாது தமிழ் மக்கள் வழங்கிய வாக்குகளால் நான்கு உறுப்பினர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து நாடாளுமன்றிற்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தினை ஏற்றுக்கொண்டு தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை மதித்து அவர்களின் அபிலாசைகள் நிறைவு பெற உறுதியுடன் உழைக்க வேண்டும். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தேசிய அரசாங்கத்திற்கு எதிர்ப்பு

# மகிந்தவை எதிர்க்கட்சி தலைவராக்க முயற்சி!

(கொழும்பு)

**புதிய நாடாளுமன்றின் எதிர்க்கட்சித் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நியமிப்பதற்கும் தேசிய அரசாங்கத்தில் இணையாமல் கொள்கையை பாதுகாப்பதற்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் சிலர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.**

மேல் மாகாண சபை முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் வீட்டில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற கலந்துரையாடலில் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மகிந்த ராஜபக்ஷவின் இணக்கப்பாட்டுடன் அவரை எதிர்க்கட்சித் தலைவராக நியமிப்பதற்கு அக் குழு தீர்மானித்துள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இம்முறை நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பிரபல ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் பெரும்பான்மை இது தொடரபில் இணக்கப்பாட்டை வெளியிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாறு ஒரு கூட்டம் கொழும்பில் நடைபெற்றதாக சிங்கள ஊடகமொன்று மேல் மாகாண சபை முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடம் கேட்டு உறுதி செய்து கொண்டுள்ளது.

அத்துடன் தான் ஒருபோதும் தேசிய அரசாங்கத்திற்கு இணக்கம் தெரிவிக்கப்போவதில்லை எனவும் அவ்வாறான இணக்கப்பாடுகளுக்கு தான் எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# அநுரகுமார கட்சித் தலைவர் பதவியைத்துறக்க வேண்டும்

### சோமவன்ச அமரசிங்க கோரிக்கை



(கொழும்பு)

ஜே.வி.பி.யின் தலைவரான அநுரகுமார திஸாநாயக்க, கட்சித் தலைவர் பதவியை துறக்க வேண்டுமென முன்னாள் கட்சித் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சி மீது கொஞ்சமேனும் அக்கறை இருந்தால் அநுரகுமார திஸாநாயக்க கட்சித் தலைமைப் பதவியிலிருந்து இராஜினாமா செய்து கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தைக் கூட்டி வெற்றி நோக்கி கட்சியை நகர்த்தக் கூடிய ஒருவருக்கு பதவி வழங்க வேண்டும்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் கட்சி படு தோல்வியை அடைவதற்கு அநுர குமார திஸாநாயக்க உள்ளிட்ட நான்கு பேர் காரண-மாகும்.

1989ம் ஆண்டில் கூட ஜே.வி.பி கட்சி இந்தளவு படுதோல்வியை சந்தித்தது கிடையாது.

நான் பதவி வகித்த காலத்தில் ஜே.வி.பி.யின் உறுப்பினர் எண்ணிக்கை 41 ஆக காணப்பட்டது.

பெரும்பான்மை அரசாங்கமொன்றை அமைப்பதற்கு எந்தவொரு கட்சிக்கும் மக்கள் ஆணை வழங்கவில்லை.

நாட்டை கடன் சுமையிலிருந்து மீட்டு எடுக்க ரணில் விக்கிரமசிங்கவிற்கோ மகிந்த ராஜபக்ஷவிற்கோ முடியாது என சோமவன்ச அமரசிங்க சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வியில் தெரிவித்துள்ளார். (இ-7)

## மகிந்தவுக்கு எதிராக இ.போ.ச.வழக்கு தாக்கல்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபை நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக கொழும்பு வணிக நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்துள்ளது.142 மில்லியன் ரூபாய்களை கோரியே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது மகிந்த ராஜபக்ஷ தரப்பு தமது தேர்தல் பிரசாரங்களுக்காக பயன்படுத்திய பேருநதுக்களுக்காக இந்த தொகை பணத்தை செலுத்த வேண்டியுள்ளதாக வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கில் சுசில் பிரேமஜயந்த, அனுர பிரியதர்சன யாப்பா உட்பட்டோரும் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (இ-7)

# தேசிய அரசை அமைப்பது தொடர்பாக சமலின் இல்லத்தில் கலந்துரையாடல்

தேசிய அரசாங்கமாக தொடர்ந்து செயற்படுகின்றமை தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பதவிப் பிரமாணம் செய்துகொள்ளவுள்ள உறுப்பினர்களின் கருத்துக்களை ஆராய்ந்து அறிக்கை தயாரிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்ட குழு ஆயத்தமாகியுள்ளது.

முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இது தொடர்பில் முதற்கட்ட கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் புதிதாக நாடாளுமன்றிற்கு தெரிவாகியவர்கள் மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இடையில் நேற்று முன்தினம் காலை சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

தெரிவாகியவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தோடு எதிர்வரும் அரசியல் நடவடிக்கை தொடர்பில் தீர்மானம் மேற்கொள்வதற்காக இச் சந்திப்பு இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### ஞானமும் தானமும்

மனிதனுக்கு வேண்டிய தெய்வ சம்பத்து (செல்வம்) எவை என்று பட்டியலிட்ட கீதை 3 ஆவதாக ஞானயோகத்தில் நிலை நிற்பதைச் சொல்கிறது.

நிலைத்தது எது? அழிவது எது? என்று தேடிக் கண்டுபிடிப்பது ஞானியின் வேலை. அழியக்கூடிய எதன்மீதும் பற்று வைக்காது அழியாத ஒன்றின்மீது கலையாத பற்று வைத்து நிலையாக நிலைப்பதே ஞானயோகம்.

நம்முடைய உடம்பு வேறு; நாம் வேறு. இந்த வேறுபாடே பலருக்குத் தெரியாது. உடம்பு அழியக்கூடியது. ஆனால் அதன் உள்ளே இருப்பது அழிய முடியாதது. அதை ஆன்மா என்கிறது கீதை. உடம்பின் மீது கவனம் பற்று வெறி கொண்ட ஒவ்வொருவரும் அசுரரே. ஆன்மா பற்றிய அறிவு தெளிவு அதன் வழிச் சிந்திப்பவர் தேவரே. ஆன்மாவுக்கு மரணம் இல்லை என்பதால் ஆன்ம ஞானியும் மரணம் அடைவதில்லை. அமரர் என்று தேவர்களைச் சொல்கிறோம். மரணம் அற்றவர்கள் என்று பொருள்.

பகவான் ரமணரைப் போன்றவர்கள்தான் ஞானயோகத்தில் நிலை நின்று அப்படி அமரர் ஆனவர்கள். அவர்களுக்கு உடம்பின்மீது ஆசை கிடையாது. திருவண்ணாமலையில் பாதாளலிங்கம் அருகே ரமணர் தவம் செய்தபோது உடம்பை எலி கடித்ததுகூட அவருக்குத் தெரியாது.

பிற்காலத்தில் அவர் முதுகில் இருந்த புண்ணைக் கீறி மருத்துவர்கள் ரண சிகிச்சை செய்தபோது மயக்க மருந்து பெறாமல் மௌனமாகச் சிகிச்சை செய்து கொண்டார். வலி இல்லையா? என்ற போது நான் வேறு, என் உடம்பு வேறு என்று பதில் சொன்னார் பகவான் ரமணர்.

தன்னைத்தானே கேள்வி கேட்டு விடைகாண்பது அவர் காட்டிய வழி. நான் யார்? என்பதே அவரது முதலும் முடிவுமான கேள்வி. பஞ்சபூதங்களால் உருவான உடம்பு நானா? இல்லை தமிழ்மொழியில் இயல்பிலேயே இந்த ஞானம் உள்ளது. உடம்பு வேறு, நான் வேறு என்ற அறிவு ஆங்கிலத்திற்குக் கிடையாது. தமிழுக்கு உண்டு.

நோய் வந்தால் எனக்கு உடம்பு சரியில்லை என்போம். எனக்கு என்று நம்மை உடம்பில் இருந்து பிரித்துச் சொல்வதால் உடம்பு நானல்ல என்பது நம் முடிவு. நான் சரியில்லை என்றா சொல்கிறோம்? ஆங்கிலத்தில் I am not well என்பார்கள். உடம்புதான் நான் என்கிற அறியாமை ஆங்கிலத்திற்கு உண்டு. அதனால் ஆங்கிலேயர்களுக்கும் உண்டு. அவர்களுக்கு உண்டு நமக்கு இல்லை.

பத்து இந்திரியங்கள், ஐந்து ஐம்பூதங்களால் ஆன உடம்பு மரணத்திற்குப் பிறகும் பூமியில் கிடக்கும். ஏதோ ஒன்று அதிலிருந்து வெளியேறுகிறது. எனவே அழியக்கூடிய உடம்பு நான் அல்ல. அழியாததாக உடம்பு மாறி உடம்பு புகும் ஆன்மாவே நான் என்கிற ஞானம் பெறுவதே ஞானயோகம்.

பிறகு மனம்தான் நான் என்று எண்ணத் தோன்றும். உண்மையில் மனம் என்ற ஒன்றே இல்லை என்பது பகவான் ரமணர் முடிவு. வெங்காயம் உரிக்க உரிக்க ஏதுமற்றதாகி விடுகிறது. அதுபோல் நமது பழைய எண்ணங்களின் ஒவ்வொரு பதிவையும் வெங்காயத் தோல் போல் உரிக்க உரிக்க எண்ணங்களற்ற நிலை தோன்றும். எண்ணங்களின் குவியலாகிய மனம் இல்லாமலேயே போய்விடும். மனத்தைக் கொல். மனோ நாசம் பெறு என்பதே ஞானயோகம்.

ஒவ்வொரு எண்ணம் தோன்றும் போது இது யாருக்கு தோன்றியது? என்று கேட்டால் எனக்கு என்று விடை வரும். எனக்கு என்றால் எண்ணம் வேறு. நான் வேறு என்ற தெளிவு வரும். எண்ணமோ எண்ணத்தின் குவியலாகிய மனமோ நான் அல்ல என்று விளங்கும். ஒவ்வோர் எண்ணத்தையும் நான் யார் என்ற கேள்வி மூலம் அதன் உற்பத்தி இடத்திலேயே கொல்ல வேண்டும் என்கிறார் ரமணர். பிறகு அந்தக் கேள்வியையும் கொல்லவேண்டும் . அதுவே பூரண ஞானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த ராஜபக்ஷவின் தோல்விக்கு பிரபாகரனும் புலிகளுமே காரணம்

தோல்வி மேல் தோல்வி மகிந்த ராஜபக்ஷவிற்கு வர முக்கிய காரணம் விடுதலைப் புலிகளும் அதன் தலைவர் பிரபாகரனுமே .

யுத்தகால புலிகளின் செயற்பாடுகளை அழித்து விட்டதாக ஆர்ப்பரித்து சிங்கள மக்களை இனவாதத்துடன் வழிநடத்திக் கொண்டு குடும்பத்திற்கு வேண்டிய சுக பேகங்களுகாக தமிழ் மக்களின் அனைத்து சுய உரிமைகளையும் இழக்கச் செய்து மாளிகைகளை மகிந்த கட்டினார்.

இந்த காலப்பகுதியில் திமிர் பிடித்து அலைந்த மகிந்தவின் குடும்பத்தினருக்கு, எது நடந்தாலும் அது அவர்களுக்கு சாதகமாக வேண்டும் என்பதற்காக எத்தனை கொலைகள், கொள்ளைகள், அப்பாவி மக்கள் மீது பொய்க் குற்றங்கள் சுமத்தி சிறைவாசம் என எல்லை மீறிய செயற்பாடுகளை செய்த இந்த மகிந்தவிற்கு, இப்படி நடக்குமா? என்ற சந்தேகம் தமிழ் மக்களுக்கு தொடர்ந்த வண்ணமே இருந்தது.

ஆனால் மகிந்த ஜனாதிபதி கால எல்லை இரண்டு வருடம் இருக்கும் போதே மேலும் 5 வருடங்களுக்கு ஜனாதிபதியாக வேண்டும். அந்த கால எல்லைக்குள் தனது புதல்வன் நாமல் ராஜபக்ஷவை அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வைத்து வெற்றி பெறவைக்க வேண்டும் என்ற எண்ணம் வரத் தோன்றியதே இந்த மகிந்தவின் வீழ்ச்சிக்கு ஆரம்பம் என உறுதியாக கூறலாம்.

அன்றே இவரின் நிரந்தர குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்ட இயற்கை முடிவு செய்து மனதில் பேராசை என்ற விதை விதைக்கப்பட்டது. அது சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து வந்த விதமே இவரின் இனவாத பேச்சுக்கள் செயற்பாடுகள் இதற்காக இவரின் சகோதரர்கள் அனைவரும் உதவினார்கள்.

இந்த செயற்பாடுகளுக்கு முக்கிய கருப்பொருளாக விடுதலைப் புலிகளையும், தேசிய தமிழ் உலகத் தலைவர் பிரபாகரனையும் தங்களின் செயற்பாட்டிற்கான சித்திரத்தை வரையும் சுவராக்கிவிட்டார்கள்.

உதாரணமாக எந்த ஒரு விதை விதைத்தாலும் அது மண்ணைவிட்டு வெளியே தனது முகத்தை காட்டும் போது பண்படுத்தப்பட்ட மண்ணில் வெடிப்பு ஏற்பட்டால் மாத்திரமே விதை முளைத்து வெளியில் வர முடியும். அது போல் இந்த பாதைகளின் செயற்பாடுகள் வெளிவருவதற்கு இனவாத பேச்சுகள் நீராகவும், பசளையாகவும் மாறியது. இந்த மாற்றத்தை யார் ஏற்படுத்தினார்கள் என்பதே இங்கு மிக முக்கியமானதாகும்.

இதை இயற்கை செய்யவில்லை. 2009 மே 18ல் தமிழ் இனத்தை அழித்த நாள், உலகெங்கும் வாழ்ந்த தமிழ் உள்ளங்கள் துடிதுடித்த நாள் (மு.கருணாநிதி குடும்பத்தை தவிர்ந்து) தாகமாக இருந்தும் தமிழ் மக்கள் தண்ணீர் குடிக்க முடியாது, பசியாக இருந்தும் உணவை உண்ண முடியாது, உடம்பெல்லாம் படபடப்பு, துடிதுடிப்பு, க்ண்ணீர் கூட கண்களில் இல்லாது போன நாள்.

அந்த நாளில் இந்த கொடு பாதகனும் அவனுக்கு வேண்டிய கருணா, பிள்ளையான், போன்ற காட்டிக் கொடுத்த எட்டர்களோ மது மயக்கத்தில். மண்ணோடு மண்ணாக போன தமிழ் இனத்தின் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய எமது தலைவன் பிரபாகரன் மறைந்து விட்டதாக ஊடக அறிக்கைகள். ஆனால் எமது மனங்களில் அந்த உயர் தலைவரின் இளம் துடிப்புடன் உள்ள உருவமும் அவரின் கூர்மையான கண் பார்வையுமே அன்றும் இன்றும் தெரிகின்றது.



அவர் மௌனித்து விட்டதாக யார் கூறினாலும் மானம் உள்ள எந்த தமிழனும் ஏற்றுக் கொள்ள மாட்டான். காரணம் அவர் எமது வழிகாட்டும் ஒளி, இதை கடைசி தமிழன் இந்த உலகில் வாழும் வரை அதே இளமை, அதே சீருடையில் பிரகாசமான பிரபாகரன் என்ற தலைவன் தமிழ் மக்களை வழி நடத்துவார் என்பதே உண்மை.

இந்த நிலையில் மகிந்தவின் ஆட்சிக்கு கவசமாக சிங்கள மக்கள் முன் காட்டிக்கொண்டு செய்த அத்தனை தீய செயல்களையும் இந்த பிரபாகரன் பார்க்காமலா இருப்பார். அவரும் மறைந்த தமிழ் விடுதலை தியாகிகளின் விருப்பங்களும் வருடா வருடம் மே 18 இல் மகிந்தவை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்ததை மறைக்கவே பால் சோறு (அன்னதானம்) தங்கள் சிங்கள இன மக்களுக்கு வழங்கும் கலாசாரமாக மாற்றினார்.

மகிந்த குடும்பம் தங்களது புதல்வர்களுக்கு திருமணம் செய்து வைக்க எடுத்த முயற்சிகள் அனைத்தும் திடீர், திடீரென தடைப்பட்டு மகிந்தவின் மனைவியை மன அழுத்தத்திற்கு ஆட்டி படைத்ததை இந்த நாட்டு மக்கள் பார்த்திருக்க முடியாது. அதற்காக அந்த குடும்பம் செய்த சமய சடங்குகள் இதில் கூட இடைத்தரகர்களாக செயற்பட்டு கொமிசன் பெற்ற மலையக தலைமைகளும் இருந்தார்கள்.

ஆனால் பிரபாகரனின் உறுதி, செயற்பாடுகள் எந்த ஒரு மத கடும் பூசைகளினாலும்கூட தடுக்க முடியாது போய்விட்டது. காரணம் தலைவர் பிரபாகரனின் எண்ணம் செயற்பாடுகள் தர்மத்திற்கும் ஆச்சாரங்களுக்கும் உட்பட்டு செயற்பட்டதே முக்கிய காரணமாகும்.

மகிந்த தோல்வியின் ஆரம்பம் அவரின் வீட்டிலேயே ஆரம்பித்தது. ஆம், அவரின் புதல்வர்கள் எதைக் கேட்டாலும் அதை அரச, பொது மக்களின் வரிப்பணத்திற்கு அரச விழாவாக மாற்றிய மகிந்தவிற்கு புதல்வர்களின் திருமணத்தை செய்து முடிக்க முடியாது போனது ஆரம்பம். அதில் தொடர்ந்து இரண்டு வருடம் இருக்கும் போது ஜனாதிபதி தேர்தலை நடத்த எடுத்த முடிவு ஜனவரி 8 ஆம் திகதியை தேர்தல் தினமாக பிரகடனப்படுத்தியது. தோல்வியின் பின் நிம்மதியற்று அங்கும் இங்கும் அலைந்து கொண்டு வீடு தேடியது.



அவருக்கு தலைநகரிலே அத்தனை சொத்துக்கள் இருந்தும் அரச மாளிகையில் தொடர்ந்து தங்கி இருக்க எடுத்த முயற்சி, மயில் மாளிகை என்ற வீட்டை பல மில்லியன் செலவு செய்து சீர் திருத்தியும் இந்திய பிரபல மந்திர வாதிகளை அழைத்து சமய சடங்குகளை செய்தும், வீட்டின் முன் இருந்த நீச்சல் தடாகத்தால் உயிர் ஆபத்து உள்ளதாக கூறி அதை கடல் மணலால் நிரப்பியும் அங்கு குடியேற முடியாது.

அதைத் தொடர்ந்து நாளாந்தம் பகலப் பொழுதை சமய தலங்களில் மலர் பூசை நடத்தியும் பழக்கப்பட்ட காரணத்தால் மக்களுக்கு போக்குவரத்து மற்றும், உணவு, உடைகளை வழங்கி அவர் செல்லும் பௌத்த விகாரைகளுக்கெல்லாம் மக்களை அழைத்துச் சென்று கூட்டங்களை நடத்திக்கொண்டும் நிம்மதி இல்லாத வேளையிலேயே இந்த பாராளுமன்ற தேர்தல் வந்தது.

இது அவருக்கு மேலும் ஓர் வசதியை ஏற்படுத்தியது. ஆம் பௌத்த விகாரைகளுக்கு செல்வதை தற்காலிகமாக நிறுத்தி பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டு தனது இனவாத கருத்துக்களை பரப்ப கொள்ளை அடிக்கப்பட்ட பணத்தை எல்லாம் வீண்விரயம் செய்ய வேண்டிய கட்டாயம். உலகிலேயே ஜனாதிபதியாக கடமையாற்றிய ஒருவர் சாதாரண பாராளுமன்ற பிரதிநிதியாக போட்டியிட்டதாக நாம் அறிந்திருக்கவில்லை. ஆனால் மகிந்தவின் செயற்பாடுகள் மூலம் நாம் அறிந்து கொண்டோம். இருப்பினும் தனது சொந்த மாவட்டமான அம்பாந்தோட்டையில் இருந்து அதிக சிங்கள மக்கள் வாழும், குருநாகல் பகுதியில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட வேண்டிய சூழ்நிலை.

இதன் பிரதிபலன் சொந்த மாவட்டத்தில் ஒரு ஆசனத்தை இழந்து குருநாகல் மாவட்டத்தில் இரு ஆசனத்தை இழக்க நேர்ந்தது. அதிலும் தோல்வி. ஆறு வருடங்கள் 90 நாட்களில் அதே 18 ஆம் திகதி பால் சோறு கொடுத்த மகிந்த இன்று துடி துடிக்கின்றார். அவருக்கு தாகம் ஏற்படுகின்றது. தண்ணீர் குடிக்க முடியவல்லை, பசி எடுக்கின்றது உணவு உண்ண முடியவில்லை என்ன ஒற்றுமை அன்றும் இன்றும்.

இப்படி தோல்வி மீது தோல்வியை கொடுப்பது யார் ? தனது ஆட்சியை நிரந்தரமாக்க அன்று முதல் 15 ஆம் திகதி வரை மகிந்த பயன்படுத்திய பிரபாகரன் என்ற பெயர் கொண்ட அதே கவசம் இப்போது மகிந்தவிற்கு எதிராக திரும்பியதே காரணம் தோல்வி மேல் தோல்வி மகிந்த ராசபக்ஷவிற்கு வர முக்கிய காரணம் விடுதலைப் புலிகளும் அதன் தலைவர் பிரபாகரனுமே.

மகா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வட - தென் கொரியாக்கள் பரஸ்பரம் ஷெல் தாக்குதல்

## கிராம மக்கள் வெளியேற்றம்

(சியோல்)

**தென் கொரியாவிலிருக்கும் இராணுவ முகாம் மீது வட கொரியா நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியது. இதையடுத்து, தென்கொரியாவும் பதில் தாக்குதல்களை நடத்தியது என தென்கொரியா தெரிவித்துள்ளது.**



தென்கொரியாவுக்கும் வட கொரியாவுக்கும் இடையில் 1950-53 இல் நடந்த யுத்தத்தில் அமைதி உடன்படிக்கை ஏதும் ஏற்படவில்லை. போர் நிறுத்தம் மட்டுமே செய்துகொள்ளப்பட்டது. இதனால், இரு நாடுகளுக்கும் இடையில் மோதல் நடப்பது வாடிக்கையாக இருந்துவருகிறது.

இந்நிலையில், தென் கொரியா சியோலுக்கு வட மேற்கில் இருக்கும் யோன்சியோன் பகுதியின் மீது அந்நாட்டு நேரப்படி நேற்று முன்தினம் மாலை நான்கு மணியளவில் வடகொரியா தாக்குதல் நடத்தியது. இதையடுத்து ரொக்கெட் ஏவப்பட்ட பகுதியை நோக்கி தென்கொரியாவும் தாக்குதல் நடத்தியது.

யோன்சியோனில் வசித்துவந்த 80 பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது. அப்பகுதியில் வசிக்கும் மற்றவர்களும் வெளியேற வலியுறுத்தப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இரு தரப்பிலும் ஏற்பட்ட சேதம் குறித்து இதுவரை எந்த தகவலும் வெளியிடப்படவில்லை.

இதேவேளை தென்கொரியாவின் இராணுவ நிலைகளை வட கொரியா குறிவைத்து ஷெல் தாக்குதல்களை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (3-7)

# நடுவானில் விமானங்கள் விபத்து 31பேர் பரசூட்மூலம் உயிர்தப்பினர்



சுலோவாகியாவில் பரசூட் வீரர்களை ஏற்றிச் சென்ற விமானங்கள் நடுவானில் மோதி விபத்துக்குள்ளானதில் 7 பேர் உயிரிழந்தனர். 31 பேர் பரசூட் மூலம் குதித்து உயிர்தப்பியுள்ளனர்.

மேற்கு சுலோவாகியாவில் கார்வெனே காமென் கிராமத்தில் கடந்த வியாழன் காலை 7.20 மணியளவில், பர சூட் வீரர்களை ஏற்றிச் சென்ற விமானங்கள் மோதி விபத்து ஏற்பட்டது. விமானங்கள் வெடித்து சிதறி கீழே விழுந்தன. இதற்கிடையே விமானத்தில் பயணம் செய்த வீரர்கள் தங்களது பரசூட்டை பயன்படுத்தி கீழே குதித்தனர். விமானங்களில் 40 இற்கும் மேற்பட்டோர் இருந்தனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர். சிலரை காணவில்லை என்று கூறப்படுகிறது. விமானம் விபத்துக்குள்ளான பகுதிக்கு மீட்பு குழுவினர் சென்று உள்ளனர். மீட்பு குழுவினர் ஹெலிகொப்டர் மூலம் விரைந்து சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு விமானங்களும் சுமார் 4,921 அடி உயரத்தில் மோதிக் கொண்டன என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதுதொடர்பாக அரசு அதிகாரிகள் விசாரணை நடத்திவருகின்றனர். இதற்கிடையே அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சர் பேசுகையில், 31 பரசூட் வீரர்கள் தங்களது பரசூட்களை பயன்படுத்தி விமானத்தில் இருந்து குதித்து உயிர்பிழைத்து உள்ளனர்.

அவர்கள் பத்திரமாக தரையிறங்கினர். இது அதிசயம் தான். சிலருக்கு காயம் ஏற்பட்டுள்ளது. ஆனால் வைத்தியசாலையில் நீண்ட நாட்கள் இருந்து சிகிச்சை பெறவேண்டிய அவசியம் கிடையாது என்று கூறியுள்ளார். (3-7)

# சோமாலியாவில் தாக்குதல் 25 தீவிரவாதிகள் உயிரிழப்பு



(ஜோகன்னஸ்பர்க்)

ஆபிரிக்க நாடான சோமாலியாவில் அல் ஷபாப் தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். பல கிராமங்களை அவர்கள் கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

அந்த தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கு இராணுவம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த நிலையில், ரான் பகுதியில் கடந்த 48 மணி நேரத்தில் இராணுவம் நடத்திய அதிரடி தாக்குதல்களில் 25 தீவிரவாதிகள் உயிரிழந்தனர். இதை மூத்த இராணுவ அதிகாரி முகமது உமர் உறுதி செய்துள்ளார்.


அல் ஷபாப் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிராமங்களை விடுவிக்கும் வரையில் தாக்குதல் தொடரும் என அவர் மேலும் கூறினார்.

இதேவேளை சோமாலியா, எதியோப்பியா கூட்டுப்படைகள் மீது தாக்குதல் நடத்தி பெருத்த சேதத்தை ஏற்படுத்தி உள்ளதாக அல் ஷபாப் தீவிரவாதிகள் கூறி உள்ளனர். (3-7)

# முகத்தை மறைக்க திரை அணியவில்லை 5 பெண்கள் கல்லால் அடித்துக்கொலை

(மொசூல்)

ஈராக் மற்றும் சிரியாவின் சில பகுதிகளை கைப்பற்றி ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் இஸ்லாமிய நாடாக அறிவித்துள்ளனர். ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட மொசூல் நகரில் கிலானி முகாமில் 5 பெண்கள் முகத்தை மறைக்க திரை அணியவில்லை எனக்கூறி அவர்களை கல்லால் அடித்து கொலை செய்து உள்ளனர்.ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் தங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் நகரங்களில் கடுமையான தண்டனைகளை நிறைவேற்றி வருவதாக குர்தீஷ் அதிகாரிகள் தெரிவித்து உள்ளதாக ஈராக் ஊடகங்கள் தகவல் வெளியிட்டு உள்ளன.



கிலானி முகாமில் இருந்த 5 பெண்கள் தங்கள் முகத்தை மறைக்க திரை அணியவில்லை என கூறி இந்த தண்டனை நிறைவேற்றப்பட்டு உள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு கடுமையான தண்டனைகளை அளித்து வருகினறனர். கடந்த ஒரு மாதத்திற்கு முன ஒரு பெண் திருமணத்தின் போது கன்னி இல்லை என்பது தெரிந்ததால் அந்த பெண் கல்லால் அடி [illegible]

# 4 பலஸ்தீனர்கள் எகிப்தில் கடத்தல்

(காஸா)

எகிப்து-காஸா எல்லையில் உள்ள ரபா நகரில் இருந்து கெய்ரோ விமான நிலையத்துக்கு நேற்று முன்தினம் ஒரு பேருந்து சென்று கொண்டிருந்தது. இந்த பேருந்தில் சுமார் 50 பலஸ்தீனர்கள் பயணம் செய்தனர். அந்த பேருந்தை துப்பாக்கி ஏந்திய அடையாளம் தெரியாத நபர்கள் தடுத்து நிறுத்தினர். பேருந்து நின்றவுடன் அதில் இருந்து 4 பலஸ்தீனர்களை அவர்கள் பிணைக்கைதிகளாக பிடித்து, கடத்திச்சென்றனர். இது காஸா முனை பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது பற்றி காஸா உள்துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் இயாத் அல் பசூம் கூறும்போது, "இந்த சம்பவம் தொடர்பாக எகிப்து அரசின் உயர் மட்டத்தினரை தொடர்பு கொண்டு வருகிறோம். கடத்தப்பட்ட 4 பலஸ்தீனர்களையும் மீட்டு விடுவிக்குமாறு எகிப்து அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம்" என்றார்.

இந்த கடத்தல் சம்பவத்துக்கு எந்த வொரு தீவிரவாத இயக்கமும் இதுவரை பொறுப்பு ஏற்கவில்லை. (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசாங்கம் என்பது மக்கள் ஆணைக்கு எதிரானது

## உதய கம்மன்பில தெரிவிப்பு

(கொழும்பு)


தேசிய அரசாங்கம் என்ற ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் கொள்கைக்கு எதிராகவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு மக்கள் வாக்களித்தனர்.

எனவே தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுவது மக்கள் ஆணையை மீறும் செயல் என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான தேர்தல் பிரசாரத்தின் போது தேசிய அரசாங்கத்துக்கு எதிராகவே பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அதனை ஏற்றுக்கொண்டே மக்களும் வாக்களித்தனர்.

எனினும் இன்று கூட்டமைப்பின் மூலம் தெரிவானவர்கள், தேசிய அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவது ஏற்க முடியாதது என்று கம்மன்பில மேலும் தெரிவித்தார். (இ-7)





# 2020 வரை ஜனாதிபதி, பாராளுமன்ற தேர்தல்கள் நடத்தப்பட வாய்ப்பில்லை

## சம்பிக்க தகவல்

(கொழும்பு)

**ஊழல், மோசடிகளை ஒழிக்க தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், ஜனாதிபதித் தேர்தலோ அல்லது பொதுத் தேர்தலோ 2020 ஆம் ஆண்டுவரை நடைபெறமாட்டாது என நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**



நாட்டை முன்னெடுத்துச் செல்லும் ஐக்கிய தேசிய முன்னணியின் தெளிவான வேலைத்திட்டத்தை சரியான முறையில் புரிந்துகொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒத்துழைப்பு வழங்குமென்ற நம்பிக்கை இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த பொதுத் தேர்தலின்போது தனது கட்சியை மட்டும் சிந்தனையில் கொண்டு செயற்படாமல் நாட்டைப் பற்றி சிந்தித்து ஒரு பொதுவான இலக்குக்காக செயற்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட குழுவினருக்கு நன்றி தெரிவித்த பாட்டலி சம்பிக்க ரணவக்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பொறுப்பேற்காமல் இருப்பது அவரது தனிப்பட்ட விடயம் எனத் தெரிவித்தார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டுக்காக ஏதேனும் ஒரு கடமையை நிறைவேற்றுவாராயின் அதை தான் வரவேற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்கு நாட்டை வளம்மிக்கதாக முன்னெடுத்துச் செல்வதற்கு அர்ப்பணிப்புடன் அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்பட முன்வரவேண்டும் என அனைத்துக்கட்சிகளிடம் கேட்டுக் கொண்ட அவர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீண்டும் மறுசீரமைப்பு செய்வதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

ஊழல் மோசடிகளை தடுப்பதற்கு பல்வேறுபட்ட நடவடிக்கைகளை எடுக்கக் கிடைத்திருக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் நடத்துவதற்குப் பின் நிற்கப் போவதில்லை என்றும் தெரிவித்தார். பத்தரமுல்லையிலுள்ள நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

நடந்து முடிந்த தேர்தலில் எமது முன்னணியிலிருந்து கல்விமான்கள் இருவர் வெற்றிபெற்றுள்ளனர். கடந்த ஜனவரி 8 ஆம் திகதி பெற்ற வெற்றியுடன் நல்லாட்சியை முன்னெடுத்துச் செல்வதே எமது நோக்கமாகும். இனங்களுக்கிடையே ஒற்றுமையைக் குலைக்க முயற்சித்த குழுவினர் இந்தத் தேர்தலில் புறக்கணிக்கப்பட்டார்கள். வடக்கிலும் இவ்வாறானவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். தமக்கு 58 இலட்சம் வாக்குகள் இருப்பதாக மகிந்த ராஜபக்ஷ குழுவினர் ஒரு மாயையை உருவாக்கினர். இதன் மூலம் தமக்கு பிரதமராக முடியும் என்றும் அவர் நம்பியிருந்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்தால் நாடு பிளவுபடும், புலிகள் மீண்டெழுவார்கள், அரச வளங்கள் தனியார் மயப்படுத்தப்படும் எனப் பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்ட மகிந்த ராஜபக்ஷ குழுவினர் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டனர்.

மகிந்த ராஜபக்ஷவுக்கிருந்த 58 இலட்சம் வாக்குகளும் இந்தத் தேர்தலில் குறைந்துபோனது. ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வாக்குகள் எதுவும் குறைந்துவிடவில்லை. அனைவரும் ஒரு தேசிய அரசாங்கத்துக்காகச் செல்ல வேண்டும். இந்த நாட்டில் இலஞ்ச ஊழல்களை ஒழிப்பதற்கு ஐவகை வேலைத்திட்டங்களை நாங்கள் முன்வைத்திருக்கின்றோம்.

நீதியாகவும் நேர்மையாகவும் பிழையின்றியும் இந்தத் தேர்தலை நடத்தியதையிட்டு தேர்தல் ஆணையாளருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தல் திணைக்கள அதிகாரிகள் பொலிஸாருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றாலும் நாம் திருத்திக் கொள்ள வேண்டிய விடயங்கள் நிறையவே உள்ளன. தேர்தலொன்றின் போது பாதாள உலகக் கோஷ்டியினரின் அச்சுறுத்தல், பரிசுப் பொருட்கள் வழங்குதல், சுவரொட்டிகள் என்பவற்றை இல்லாதொழிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையின் மூன்றாவது பெரிய அலுவலகம் என பெயர் பெற்ற யாழ்.மாவட்ட செயலகம் அமையப்பெற்று நேற்றுடன் ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது

இலங்கையில் இரண்டாம் தர நிர்வாக அலகுக்கான மாவட்ட செயலக நிர்வாகம் தோற்றுவிக்கப்பட்டதன் பின்னர் மத்திய அரசிற்கும் மாவட்டத்திலுள்ள அமைச்சுக்களின் இலாகாக்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கிடையில் தொடர்பாடலை ஏற்படுத்தவும், மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் மாவட்டத்திலுள்ள சிறிய நிர்வாக அலகுகளுக்கு உதவிகள் வழங்குவது போன்ற செயற்பாடுகள் நாட்டிலுள்ள 25 மாவட்டத்திலும் அமைக்கப்பட்ட மாவட்ட செயலகங்களினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்கமைய இலங்கையின் பெரு நகரங்களிலொன்றான யாழ்ப்பாணத்திலும் இற்றைக்கு நூற்றெண்பது ஆண்டுகளுக்கு முன்னர் மாவட்ட செயலக நிர்வாகம் அப்போதைய ஆட்சிக்காரர்களினால் நடைமுறைக்கு வந்தது.

யாழ். பழைய பூங்காவிற்கு அண்மையிலுள்ள சுமார் 26 ஏக்கர நிலப்பரப்பில் மாவட்டத்தின் முதலாவது மாவட்ட செயலக அலுவலகம் நிர்மாணிக்கப்பட்டு குறித்த கட்டடத்தில் அதன் பணிகள் சுமார் 130 ஆண்டுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இருந்தும் போதிய இடப்பற்றாக்குறை மற்றும் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலுள்ள மத்திய அமைச்சுக்களின் நிர்வாக செயலகங்களை ஒன்றிணைத்து நிர்வகிக்க வேண்டி மாவட்டத்திற்கான புதிய கட்டடம் அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

அதைத்தொடர்ந்து சுமார் 1960 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் பழைய கச்சேரி அலுவலகத்திற்கு முன்னாள் மாவட்டத்திற்கான புதிய செயலக கட்டடத்திற்கான [illegible] நாட்டப்பட்டு கட்டடப்பணிகள் [illegible]னெடுக்கப்பட்டன.

சுமார் ஒன்றரைக்கோடி நிதி ஒதுக்கீட்டில் அமையப்பெற்றுவந்த இக்கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்று 1965 ஆம் ஆண்டு இக் கட்டடம் தனது மக்கள் வேலையை ஆரம்பித்தது.

அப்போதைய உள்நாட்டு அமைச்சராக இலங்கை பாராளுமன்றில் அங்கம் வகித்த டபிள்யூ. தகநாயக்கவினால் தற்போதைய யாழ். மாவட்ட செயலக கட்டடம், யாழ்ப்பாண கச்சேரியாக 1965 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

அப்போது இலங்கையிலிருந்த அலுவலகங்களின் தரவரிசையில் யாழ்ப்பாணத்தில் அமைந்த இக்கட்டடமானது மூன்றாவது பெரிய [illegible] தனது [illegible] யாழ். மாவட்டத்திற்கு இன்னொரு சிறப்பம்சமாக அமைந்தது.

யாழ். மாவட்ட கச்சேரி அலுவலகம் மற்றும் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் இயங்கிய மத்திய அமைச்சுக்களின் எட்டு நிர்வாக அலுவலகங்களின் செயற்பாடுகளும் அதே ஆண்டில் இப்புதிய கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

இப்புதிய கட்டடம் இயங்கப்பெற்ற காலப்பகுதியில் இக்கட்டடத்தின் முதலாவது அரசாங்க அதிபராக நேவில் ஜயவீர கடமையாற்றினார்.

தொடர்ந்து இன்று வரையிலான காலப்பகுதியில் 21 அரசாங்க அதிபர்கள் இம்மாவட்டத்தின் ஆட்சியாளர்களாக தமது பணிகளை சிறப்புடன் முன்னெடுத்துள்ளமையானது இக்கட்டடத்தின் தற்போதைய பதிவுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் மாவட்ட அரசாங்க அதிபராக என்.வேதநாயகன் கடமையாற்றி வருவதுடன் இந்த கட்டடம் சுமார் 41 நிர்வாக அலுவலகங்களும் அவற்றில் பணிபுரியும் நானூற்றுக்கும் மேற்பட்ட அலுவலகர்களையும் கொண்டுள்ளது.

மத்திய அரசிற்கும் மாவட்டத்திலுள்ள பொதுமக்கள் மற்றும் பிரதேச செயலகங்கள், ஏனைய நிர்வாக அலுவலகங்கள் ஆகியவற்றுக்கிடையே சிறந்த தொடர்புகளை ஏற்படுத்தி அதன்மூலம் மக்கள் பணிகளை முன்னெடுத்துவந்த மாவட்ட செயலக கட்டடம் தற்போது ஐம்பது ஆண்டுகள் கடந்த நிலையில் இன்றும் கம்பீரத்துடன் தனது பணிகளை முன்னெடுத்து வருகின்றது. (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்தை காப்பாற்றி தருமாறு ஜனாதிபதியிடம் கோரிய மகிந்த

(கொழும்பு)


**பொதுத் தேர்தல் முடிவடைந்த பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தொலைபேசியில் தொடர்பு கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.**

மகிந்த ராஜபக்ஷ 11 முறை ஜனாதிபதியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உதவி கோரியுள்ளார்.


தொலைபேசியில் ஜனாதிபதியை தொடர்பு கொண்ட மகிந்த ராஜபக்ஷ, தனக்கும், தனது குடும்பத்தினருக்கும் எதிராக சுமத்தப்பட்டுள்ள கொலை, ஊழல், மோசடி தொடர்பாக தற்போது நடைபெற்று வரும் விசாரணையை தடுத்து நிறுத்த உதவுமாறு கேட்டுள்ளார்.

ஜனாதிபதி தலையிட்டு இந்த விசாரணைகளை நிறுத்தினால், தான் நாடாளுமன்றத்தில் பின் வரிசை ஆசனத்தில் அமர்ந்து அமைதியாக இருக்க தயாராக இருப்பதாகவும் மகிந்த கூறியுள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள ஜனாதிபதி, அதற்கான சந்தர்ப்பம் தற்போது இல்லாமல் போயுள்ளதாகவும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னர் இது குறித்து சிந்தித்து பார்த்திருக்கலாம் என கூறியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)




## நல்லூர்க் கந்தனுக்கு நிறைகுடம் வைப்பதற்கு பிலிப்பைன்ஸிலிருந்து மிகப்பெரிய தேங்காய்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபம் முன்பாக நிறைகுடம் வைப்பதற்கு பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட மிகப் பெரிய தேங்காய் ஒன்று பயன்படுத்தப்பட்டுள்ளது. வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பாமாகி நடைபெற்று வருகின்றது.

நல்லூர் கந்தனின் திருவிழாவை முன்னிட்டு ஆலயத்தின் வடக்கு பக்கமாக அமைந்துள்ள துர்க்கா தேவி மணிமண்டபத்தில் மகேஸ்வர பூஜையாகிய அன்னதானமும் நடைபெற்று வருகின்றது. இதனை முன்னிட்டு மண்டபம் முன்பாக வைக்கப்பட்டுள்ள நிறை கும்பத்தில் உள்ள தேங்காயே சாதாரண தேங்காய்களை விட ஐந்து மடங்கு பெரிதாக காணப்படுகின்றது. (இ-4)

## எஸ்.பி.திஸாநாயக்க உட்பட சிலர் தேசியப்பட்டியல் ஊடாகத் தெரிவு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிட்டு தோல்வியடைந்த முக்கிய அரசியல்வாதிகள் சிலர் அந்தக் கட்சியின் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்திற்கு நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எஸ்.பி. திஸாநாயக்க, மஹிந்த சமரசிங்க, விஜித் விஜயமுனி சொய்சா, பியசேன கமகே, நந்தி மித்ர ஏக்கநாயக்க, லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன ஆகியோரே இவ்வாறு தேசியப்பட்டியலின் ஊடாக நாடாளுமன்றத்திற்கு நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான இவர்களை தேசியப்பட்டில் மூலம் நாடாளுமன்றத்திற்கு நியமிக்குமாறு அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப்பட்டியலில் 6 பேரின் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியுள்ளது.

தோல்வியடைந்தவர்களை தேசியப் பட்டியலின் ஊடாக நியமிப்பது சட்டரீதியானது என தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அருள் நெறி விழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் நடத்தி வருகின்ற யாழ். மாவட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் ''அருள்நெறி விழா'' தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணிவரைநடைபெற்றுவருகின்றன.

இதற்கமைய இன்று சனிக்கிழமை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி. ஹேமலோஜினி குமரன் தலைமையில் இடம்பெறவுள்ள அருள்நெறிவிழாவில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் , பிரதேச செயலர் திருமதி. யசோதா உதயகுமார் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். இதன்போது வரவேற்புரையினை சண்டிலிப்பாய், அபிவிருத்தி உத்தியோகத்தர் ப. கயிலநாயகி வழங்கவுள்ளார்.

கலை நிகழ்வுகளாக பழம்பதி அறநெறிப்பாடசாலை மத்திய பிரிவு மாணவர்கள் வழங்கும் நாடகம், மானிப்பாய் மருதடிவிநாயகர் அறநெறிப்பாடசாலை மாணவர்களது பண்ணிசை,தனிநடனம், பேச்சு , மாதகல் காந்திஜி அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கும் வில்லுப் பாட்டு, குழுநடனம், நவாலி முருகானந்தா அறநெறிப்பாடசாலை மாணவர்கள் பேச்சு, இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் அறநெறிப்பாடசாலை மாணவர்களது நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (இ-5)

## தெய்வீக இசையரங்கு

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்கா தேவிதேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை நடைபெற்று வருகின்ற தெய்வீக இசையரங்கில் இன்று சனிக்கிழமை பாடல்-திருமதி. ஸ்ரீரஞ்சினி ரமணா, வயலின் -கே.குகபரன், மிருதங்கம்-பிரம்மஸ்ரீ வி.ரமணா, கெஞ்சிரா- [illegible] போர் வழங்கவுள்ளனர். (இ-5)

## நமக்கினிப் பயமில்லை

நாளை நடப்பவற்றை நமக்கறிவிப்பது
நல்லூரானின் திருவிழாக்களே-ஏழை
யாராக இருந்தாலும் அன்போடு ஒரு ரூபா
பேரோடு கொடுக்கப் பேறாகும்.
நமக்கினிப் பயமில்லை நந்தமக்கு ஊனமில்லை
நல்லூரான் மனங்குளிர்வதனாலே-அமுக்கும்
பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் ஒரு ரூபா
அருச்சனைக்குப் பறக்குமே பார்.

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்.

## குபேர ராஜகோபுரம் உடையவா

நல்லையம்பதி நாயகா
நலம் காக்கும் வேலவா
குபேர ராஜ கோபுரம் கொண்ட
மால் மருகா
உனை நாடி வருவோர்க்கு
கோடி வரம் தந்திடும் வேலவா
இந் நன்னாளில் யாவரும்
நற்பேறடைய அருள்புரியுமையா

வ.பவளகேசி
கொய்யாத்தோட்டம்

## நல்லைக் கந்தன் நனிவிருத்தம்

ஓங்கார வடிவே யாகி
உட்பொருளாக நின்று
ரீங்காரம் புரியும் வேலா
நின்திருப் புகழைப் பாட
ஓங்குமே கவிதைச் சந்த
வொலியெலாம் நீயே யையா
நீங்காது நினைப்போர்க் கெல்லாம்
நீயுண்டு நல்லைக் கந்தா

கலாபூஷணம்,சந்தக்கவிஞர்.
நவபாலகோபால்

கிருபா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற A தர
சாரதி பயிற்சி பாடசாலை
இல. 226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
TP: 021 222 4353, 077 722 5292

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய அழகு ராணியாக இந்தியப்பெண் தெரிவு



**(கேரளா)**

**கேரள மாநிலம் கொச்சியில் நடைபெற்ற அழகி போட்டியில், 2015 ஆம் ஆண்டின் ஆசிய அழகிப் போட்டியில் கனிகா கபூர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.**

கேரள மாநிலம் கொச்சியில் நடைபெற்ற இந்த அழகுப் போட்டியில் பூடான், மலேசியா, இலங்கை, உஸ்பெகிஸ்தான், ஈரான் உள்ளிட்ட நாடுகளின் இளம் பெண்கள் பங்கேற்றனர். இந்த போட்டியில் இந்திய அழகுராணியாக திகழும் கனிகா கபூர் 2015 ஆம் ஆண்டின் ஆசிய அழகு ராணியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு பரிசுகளும், பாராட்டுக்களும் குவிந்த வண்ணம் உள்ளன.

2வது இடத்தில் பிலிப்பைன்ஸ் நாட்டை சேர்ந்த அல்ப் மேரி நதானியும், 3 வது இடத்தை அஜர்பைஜன் நாட்டை சேர்ந்த ஜைல்லா குலெவாவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். (3-7)

# மும்பை தாக்குதல் படத்துக்கு தடை விதித்தது பாகிஸ்தான்

(லாகூர்)

மும்பையில் 2008 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல்களை மையமாக வைத்து பாண்டம் என்ற பெயரில் இந்தி சினிமாப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. சயீப் அலிகான், கேத்ரீனாகைப் முக்கிய வேடத்தில் நடித்துள்ளனர். கபீர் கான் இதனை இயக்கியுள்ளார்.

இந்தப் படம்எதிர்வரும் 28 ஆம் திகதி வெளியாகவுள்ளது.

இந்த நிலையில், மும்பை தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்ட லஷ்கர் இ தொய்பா தீவிரவாத இயக்கத்தின் நிறுவனரும், தற்போதைய ஜமாத் உத் தாவா அமைப்பின் தலைவருமான ஹபீஸ் சயீத், தனக்கும் தனது இயக்கத்து எதிராகவும் மோசமான கருத்துக்களை பரப்புவதால் பாண்டம் படத்துக்கு தடை விதிக்க வேண்டும் என்று லாகூர் உச்சநீதிமன்றில் வழக்கு தொடுத்தார்.

இது தொடர்பாக பதில் அளிக்க பாகிஸ்தான் அரசுக்கு லாகூர் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. இந்தப் படத்தை வெளியிடும் எண்ணம் இல்லை என பாகிஸ்தான் அரசு பதில் மனுதாக்கல் செய்தது. இதையடுத்து இந்தப் படத்தை பாகிஸ்தானில் வெளியிட தடை விதித்து லாகூர்உச்சநீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது. (3-7)

**பாரதச் செய்தி**

# 40 அடி நீளமான திமிங்கிலம் நாகையில் கரையொதுங்கியது



நாகை அருகே 40 அடி நீள திமிங்கலம் ஒன்று கரை ஒதுங்கியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நாகை மாவட்டம் சீர்காழி அருகே கடலோர கிராமமான சின்னக்குடியில், சுமார் 5 தொன் எடையுள்ள 40 அடி நீள திமிங்கலம் ஒன்று இறந்த நிலையில் கரை ஒதுங்கியது.

இதையடுத்து மீனவர்கள் சீர்காழி வனத்துறைக்கும், மீன் வளத்துறை அதிகாரிகளுக்கும் தகவல் கொடுத்தனர்.

பின்னர் சம்பவ இடத்திற்கு வந்த வனத்துறையினர், திமிங்கலத்தின் உடலை அப்புறப்படுத்தியுள்ளனர்.

மேலும், அதிக எடை காரணமாகவும், அழுகிய நிலையில் இருந்ததாலும் அதை அப்புறப்படுத்த சிக்கல் ஏற்பட்டதால், 2 ஜே.சி.பி இயந்திரங்கள் மற்றும் உழவியந்திரங்களைக் கொண்டு கடற்கரை பகுதியிலேயே திமிங்கலம் புதைக்கப்பட்டுள்ளது. (3-7)

# பீகார் சட்டசபை தேர்தல் சூடுபிடிக்கிறது பிரசாரம்

(பாட்னா)

பீகார் சட்டசபைக்கு எதிர்வரும் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் தேர்தல் நடைபெற உள்ளது. இதற்கான தேர்தல் திகதி அடுத்த மாதம் வெளியாகவுள்ளது.

பீகார் தேர்தலில் ஆளும் ஐக்கிய ஜனதா தளம் தலைமையிலான கூட்டணிக்கும், பா.ஜ.கவுக்கும் நேரடி போட்டி ஏற்பட்டுள்ளது. அங்கு எப்படியும் ஆட்சியை கைப்பற்றி விட வேண்டும் என்பதில் இரு தரப்பினருக்கும் இடையே கடும் போட்டி உருவாகி இருக்கிறது.

பா.ஜ.க. தலைவர்கள் பீகாரில் முகாமிட்டு தேர்தல் பிரசாரத்தை தீவிரப்படுத்தியுள்ளனர். பிரதமர் மோடி 3 தடவை பீகாருக்கு சென்று பிரசாரம் செய்துள்ளார். அதோடு ரூ. 1.25 இலட்சம் கோடி ரூபாவுக்கு நலத் திட்டங்களையும் அறிவித்துள்ளார்.

பா.ஜ.க.வுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் முதலமைச்சர் நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜன தா தளம், லல்லுபிரசாத்தின் ராஷ்டீரிய ஜனதா தளம், காங்கிரஸ் கட்சிகள் என்பன ஒருங்கிணைந்து தேர்தல் பிரசாரத்தை நடத்தி வருகின்றன. நிதிஷ் குமாரும், லல்லு பிரசாத் யாதவும் ஒன்றாக சென்று பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் பீகார் தேர்தலில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளார். எதிர்வரும் 30ஆம் திகதி பீகார் சென்று பிரசாரம் செய்யவுள்ளார்.

சோனியாகாந்தியின் பிரசாரத்திற்காக பாட்னாவில் பிரமாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அந்த கூட்டத்தில் பீகார் முதலமைச்சரும் ஐக்கிய ஜனதா தளம் தலைவருமான நிதிஷ்குமார், சோனியாவுடன் ஒரே மேடையில் கலந்து கொண்டு பேசுகிறார்.

நிதிஷ்குமாருடன் சோனியா ஒரே மேடையில் பிரசாரம் செய்வது இதுவே முதல் முறையாகும். (3-7)

# இந்தியாவும் பாகிஸ்தானும் பொறுமை காக்க வேண்டும்

## ஐ.நா.செயலர் பான் கீ மூன் கோரிக்கை

(நியூயோர்க்)

இந்தியாவும் பாகிஸ்தானும் பொறுமை காத்து பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வுகாண வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் பான் கீ மூன் கோரிக்கை விடுத்துள் ளார்.


கடந்த சில வாரங்களாக இந்தியாவும் பாகிஸ்தானும் பரஸ்பரம் தாக்குதல்களில் ஈடுபட்டுவருகின்றன.

கடந்த ஒரு மாத காலமாக தினமும் பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் தாக்குதலில் ஈடுபட்டுள்ளது.

இதற்குப் பதிலடியாகவே இந்தியா தாக்குதல்களை நடத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது என்று இந்தியா பாகிஸ்தான் மீது குற்றஞ்சாட்டி வருகிறது.

இந்நிலையில் இருநாடுகளையும் பெர்றுமையாக விடயத்தைக் கையாளுமாறு ஐ.நா.பொதுச்செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் இருநாடுகளுக்கிடையில் எல்லையில் நிலவும் பதற்றத்தை பேச்சுக்கள் மூலம் தீர்த்துக் கொள்வதே பொருத்தமானது என்று பான் கி மூன் வலியுறுத்தியுள்ளார்.



இதேவேளை கடந்த சில வாரங்களில் இடம்பெற்ற தாக்குதல்களில் எல்லைப் பகுதிகளில் வாழ்ந்த பொதுமக்கள் சிலர் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-7)

# உத்தரப் பிரதேசத்தில் சிறுமி சடலமாக மீட்பு

(லக்னோ)

உத்தர பிரதேச முதலமைச்சர் அகிலேஷ் யாதவின் மனைவி டிம்பிள் யாதவின் எம்.பி. யின் தொகுதியான கன்னூஜ்ஜியில் 15 வயது சிறுமியை பெற்றோர் கண் எதிரில் கொள்ளை கும்பல் பலாத்காரம் செய்தது. இது தொடர்பாக பொலிஸார் 5 பேரை கைது செய்து உள்ளனர். இந்த சிறுமி மிகவும் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இது போல் உத்தரப்பிரதேச மாநிலம் ஹார்டாய் மாவட்டம் சுர்சா கிராமத்தைச் சேர்ந்த 13 வயது சிறுமி உடல் நலம் இல்லாத தனது தந்தைக்கு மருந்து வாங்கச் சென்றார். நீண்ட நேரம் ஆகியும் சிறுமி வீடு திரும்பவில்லை. இதனால் பெற்றோர் அதிர்ச்சி அடைந்து பல இடங்களில் தேடினார்கள். இந்த நிலையில் மறுநாள் காலையில் கிராமத்திற்கு வெளியே உள்ள வயலில் சிறுமி பிணமாக கிடந்தாள். அவளது உடலில் காயங்கள் இருந்தன. பொலிஸ் விசாரணையில் சிறுமி பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டது தெரிய வந்தது.

இதையடுத்து சிறுமி உடல் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பொலிஸார் வழக்குப்பதிவு செய்து பலாத்கார குற்றவாளிகளை தேடி வருகிறார்கள்.

உத்தரப்பிரதேசத்தில் ஆளும் சமாஜ்வாடி கட்சி தலைவர் முலாயம் சிங் யாதவ் சில நாட்களுக்கு முன் ஒரு நிகழ்ச்சியில் பேசுகையில், ஒரு பெண்ணை நான்கு பேரால் பலாத்காரம் செய்ய முடியுமா? என்று கேள்வி எழுப்பினார். பெண்களின் தவறான தகவலால் அப்பாவிகள் தண்டிக் கப்படுவதாகவும், உத்தரப் பிரதேசத்தில் பலாத்கார குற்றங்கள் குறைவு என்றும் கூறியிருந்தார். அவர் சொன்ன மறுநாளே உத்தரப் பிரதேசத்தில் ஒரு பெண்ணை 7 பேர் பலாத்காரம் செய்து கொலை செய்த சம்பவம் நடந்தது. தற்போது மேலும் ஒரு சிறுமி கும்பல் ஒன்றால் பலாத்காரம் செய்யப்பட்டு இருக்கிறார். முலாயம் சிங் யாதவின் மருமகள் தொகுதியிலேயே ஒரு சம்பவம் நடந்துள்ளது. இதை தொடர்ந்து உத்தரப் பிரதேசத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டதாக காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது. (3-7)

# காஷ்மீரில் குண்டுவெடிப்பு; ஒருவர் பலி

காஷ்மீரின் பாரி பிராக்மணா பகுதியில் தனியார் இரும்பு தொழிற்சாலை ஒன்று உள்ளது. இந்த தொழிற்சாலையில் சில தொழிலாளர்கள் பழைய இரும்பு பொருட்களை பிரிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது ரஞ்சித் யாதவ் (வயது 45) என்ற தொழிலாளி வெடிகுண்டு ஒன்றை கண்டெடுத்தார்.

கண் இமைக்கும் நேரத்தில் அந்த வெடிகுண்டு வெடித்து சிதறியது. இதில் ரஞ்சித் யாதவ் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தார்.

5 தொழிலாளர்கள் படு காயம் அடைந்தனர். அவர்களுக்கு வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து தொழிற்சாலை மேற்பார்வையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊழியர்கள் நலனில் அலட்சியமாக இருந்ததாக தொழிற்சாலை உரிமையாளர் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவற்றிலும் நன்றோ, தீதோ என்பது கிடையாது. நம் எண்ணமே அதை அவ்விதம் தோற்றமளிக்கச் செய்கிறது. – ஷேக்ஸ்பியர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பௌத்த பிக்குகளுக்கு உபதேசம் செய்த சிங்கள மக்கள்

கௌதம புத்தபிரான் இந்த உலகில் அனைத்துப் பற்றுதல்களையும் துறந்தவர். கௌதம புத்தபிரானின் போதனையை–அவரின் வாழ்வியலை அறிந்தால் புத்தபிரானின் தெய்வீகம் உணரப்படும்.

புத்தபிரானின் போதனைகளைப் பரப்பி அதன் ஊடாக, உலக மக்களின் வாழ்வியலை தர்ம வாழ்வாக்கும் பணியில் ஈடுபடுவதற்காக புத்தபிக்குகள் தாமும் துறவை மேற்கொண்டு மக்கள் கொடுப்பதை உண்டு பணி செய்தல் என்ற மிகப்பெரும் தவவாழ்வை மேற்கொள்ள வழி செய்யப்பட்டது.

புத்தபிரான் எங்ஙனம் துறவை மேற்கொண்டாரோ அதற்கு ஈடாக புத்தபிக்குகளும் துறவை மேற்கொள்ள வேண்டும். இதன் அடிப்படையிலேயே புத்த பிக்குகள் அணிகின்ற காவியும் அமைந்தது.

பௌத்த சிங்களவர்கள் யாராவது இறந்து விட்டால், அவரின் வீட்டுக்குச் செல்பவர்கள் ஒரு முழம் நீளமான காவித் துண்டை எடுத்துச் சென்று இறந்தவரின் உடல் மேல் சாத்துவர். மரணச் சடங்கிற்குச் செல்கின்ற அனைவரும் இவ்வாறு செய்வர். இறந்தவரின் உடலை மயானத்தில் தகனம் செய்யும் முன் இறந்தவரின் உடல் மேல் போடப்பட்ட ஒரு முழத்திலான காவித்துண்டுகளை புத்தபிக்கு ஒருவர் எடுத்துச் சென்று அந்த முழத் துண்டுகளைப் பொருத்தி ஆடையாக அணிவார்.

இறந்த உடலின் மேல்போடப்பட்ட காவித் துணியை யாரும் விரும்ப மாட்டார்கள். எனவே எவராலும் விரும்பப்படாத ஆடையை அணிவதே தூய துறவுக்கு உகந்தது என்ற அடிப்படையில் இறந்தவர்களின் உடல்மேல் அணியப்படும் காவி முழத்துண்டை பொருத்தி பௌத்த பிக்குகள் அணிகின்ற மரபு நடைமுறையில் இருந்தது.

அந்த நடைமுறை இன்று மலையேறிப் போயிற்று. இதுதவிர; பௌத்த பிக்குகள் யாசித்து, கிடைக்கின்ற உணவை உண்ண வேண்டும் என்பதே நியதி. யாசிப்பின் போது உணவு கிடைக்கவில்லையாயின், பசியை தவமாக்க வேண்டும்.

ஆனால் இன்று என்னென்ன உணவுகள் தேவை என்று பட்டியலிட்டு மக்களிடம் கொடுத்து அதை வாங்கி உண்ணுகின்ற துறவு நடைமுறையே உண்டு. இதற்கு அப்பால், இனவாதம் பேசுவது; அரசியலில் ஈடுபடுவது; ஆட்சி அதிகாரங்களைப் பௌத்த பீடங்களுக்குள் வைத்திருப்பது என ஏகப்பட்டவை நடந்து கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் நடந்து முடிந்த தேர்தலில் போட்டியிட்ட 150 பௌத்த பிக்குகளை உங்கள் வேலைகளைப் பாருங்கள் என்று சிங்கள மக்கள் அவர்களுக்கு பாடம் புகட்டியதைப் பார்த்த போது சிங்கள மக்கள் விழிப்படைந்து விட்டனர் என்று அறுதியிட்டுக் கூறமுடிகிறது.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வில் மிகப்பெரிய முட்டுக்கட்டைகளாக இருந்த பௌத்த பிக்குகளை அரசியலில் இருந்து ஓடத் துரத்திய சிங்கள மக்களின் மனநிலை இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையைத் தந்துள்ளது.

தேசியப் பட்டியலில் பௌத்த பிக்குகள் பாராளுமன்ற உறுப்பினர்களாகலாம். ஆனால் பௌத்த சிங்கள மக்கள் பௌத்த பிக்குகளுக்கு மிகத்தெளிவாகப் போதனை ஒன்றை செய்துள்ளனர். அது அரசியல் பக்கம் வந்தால் உங்களுக்கு இதுதான் நடக்கும் என்பதாகும்.

## திருவெண்காட்டில் தெய்வீக உரை

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தில் இன்று இடம்பெறும் 3ஆம் திருவிழாவில், அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலய அதிபர் நாகராசா ராதா கிருஸ்ணன் தெய்வீக உரை ஆற்றுவார். இன்று இரவு 7 மணிக்கு இந்நிகழ்வு நடைபெறும். (ஙு)

## மர்மப்பொருள் வெடித்து கணவன், மனைவி காயம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி சரசாலைப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை மர்மப் பொருள் வெடித்ததில் கணவன், மனைவி ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

கணவனும் மனைவியும் இணைந்து தமது வீட்டு வளவைத் துப்புரவு செய்து குப்பைகளைக் கூட்டி எரித்த போது அதற்குள் இருந்த மர்மப்பொருள் வெடித்ததில் இருவரும் படுகாயமடைந்தனர்.

இருவரின் முகத்திலும் நெஞ்சுப் பகுதியிலும் காயங்கள் ஏற்பட்ட நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் சரசாலையைச் சேர்ந்த சடையன் வர்ணன் (வயது 29) அவரது மனைவியான வர்ணன் பேபி வாணி (வயது 25) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (எ-12)

## காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சிறுவன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

காய்ச்சலால் பீடிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட சிறுவன் ஒருவன் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை திடீரென மரணமானான்.

கடந்த 18ஆம் திகதி காய்ச்சல் காரணமாக இந்தச் சிறுவன் சங்கானை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தான்.

காய்ச்சல் மாறாத நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 3.00 மணியளவில் காய்ச்சல் அதிகரித்ததை அடுத்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தான்.

அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சை வழங்கியபோதிலும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் அவன் உயிரிழந்தான் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பண்டத்தரிப்பு சிற்றம்பலம் வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் கல்வி பயிலும் பண்டத்தரிப்பு சாந்தையை சேர்ந்த சிவனேஸ்வரன் டிலிந்தன் (வயது 06) மாணவனே மரணமடைந்தவராவார். மரண விசாரணையை அடுத்து சடலம் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-11)

## பாத யாத்திரை

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவத் திருவிழாவின் 10 ஆம் திருவிழாவை முன்னிட்டு பாத யாத்திரை ஒன்று யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய இப்பாத யாத்திரையானது நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஏழாலை கண்ணகை அம்மன் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி குப்பிளான் சந்திக்கு சென்று அங்கிருந்து வடக்கு புன்னாலைக்கட்டுவன் சந்தி சென்று நிலாவரை, அச்சுவேலி, இடைக்காடு ஊடாக தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தைச் சென்றடையவுள்ளது.

இப்பாதயாத்திரையில் கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஏழாலை கண்ணகை அம்மன் ஆலயத்தில் ஒன்றுகூடுமாறு பாத யாத்திரை ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## தோற்கடிக்கப்பட்டவர்களை மன்றுக்கு செல்ல அனுமதிக்க வேண்டாம்

### தேசிய அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை

(கொழும்பு)

தோல்வியடைந்தவர்களை நாடாளுமன்றம் செல்ல அனுமதிக்க வேண்டாம் என தேசிய அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரியுள்ளது.

அண்மையில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு போதியளவு விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியாது தோல்வியைத் தழுவிய சில முக்கிய உறுப்பினர்களுக்கு தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் செல்ல சந்தர்ப்பம் வழங்கப்பட உள்ளதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் இவ்வாறு தேசியப் பட்டியல் ஊடாக தோல்வியடைந்த வேட்பாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படக் கூடாது என தேசிய அமைப்புக்களின் ஒன்றியம் கோரியுள்ளது.

தோல்வியடைந்த எந்தவொரு உறுப்பினரையும் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றிற்கு கொண்டு வர ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுக்கவில்லை.

அந்த வழிமுறையை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் பின்பற்ற வேண்டுமென ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளர் கெவிந்து குமாரதுங்க ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

மக்கள் தெரிவு செய்து சிலரை தோறகடித்துள்ளனர். நாடாளுமன்றம் செல்லக் கூடாது எனக் கருதியே இவ்வாறு மக்கள் தோற்கடித்துள்ளனர்.

இவர்களை மீளவும் வேறு வழியில் நாடாளுமன்றம் செல்ல அனுமதிப்பது மக்களின் அபிலாசைகளை சீர்குலைப்பதாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## நியாயமான தேர்தல் நடைபெறவில்லை!

### மகிந்த ஆதரவு அமைப்புகள் தெரிவிப்பு

(கொழும்பு)

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தல் நியாயமான தேர்தல் அல்ல என மகிந்த ராஜபக்ஷ ஆதரவு அமைப்பான சிங்கள தேசிய அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கொழும்பு நாரஹென்பிட்டி அபயராம விகாரையில் நேறறு நடைபெற்ற அந்த ஒன்றியத்தின் ஊடகவியலாளர் சந்திப்பில் அதன் உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க இதனை தெரிவித்துள்ளார்.

பிரதமர் பதவி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட மாட்டாது என சில பத்திரிகைகள் தேர்தல் பிரசாரம் முடியும் வாரத்தில் முதல் பக்கத்தில் செய்திகளை வெளியிட்டிருந்தன.

இந்த செய்தி நியாயமான தேர்தலுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தியது. இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க தேர்தல்கள் ஆணையாளருக்கும் காலஅவகாசம் இருக்கவில்லை. எவ்வாறாயினும் இம்முறை வலுவான எதிர்க்கட்சி ஒன்று உருவாகியுள்ளது.

அதேபோல், 20 வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை எதிர்த்தவர்கள் இன்று ஒரு முன்னணிக்குள் வந்துள்ளனர் எனவும் தோல்வியடைந்தவர்களை தேசியப்பட்டியலில் நியமிக்கக் கூடாது எனவும் கெவிந்து குமாரதுங்க குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



முக்தியடைந்தால் நீங்கள் துயரத்திலிருந்து விடுதலை பெறுவீர்கள் என்று கூறுவதன் பொருள் என்னவெனில் உங்களுடைய தனிப்பட்ட துயரத்திலிருந்து விடுதலை பெறுவீர்கள் என்று அர்த்தம். ஏன் புத்தர் துயரப்பட்டார். இயேசு கிறிஸ்து துயரப்பட்டார். அனைவருமே துயரப்படுகின்றனர். நீங்களும் துயரப்படுவீர்கள். ஆனால் இனிமேல் இது உங்களுடைய துயரமாக இருக்காது. அது மனித இனத்தின் துயரம் இது உங்கள் இதயத்தைத் தொடும், உங்களால் அமைதியாக இருக்கவேமுடியாது.

அது உங்களைப் பாதிக்கும். புத்தருக்கும் இயேசுவுக்கும் நிகழ்ந்த துக்கம் மனித இனத்தின் மேல் அவர்களுக்கு இருந்த கருணையும் பரிதாபமுமே ஆகும். மற்றவர் துயரப்பட்டபோது அவர்கள் துயரப்பட்டனரே தவிர தங்களை நினைத்து துக்கப்படவில்லை. இப்போது நீங்கள் உள்ள சூழ்நிலையில் வேறு யாரேனும் துயரத்தில் இருந்தால் அதை உங்களால் உணரமுடிவதில்லை. அப்படி உணர்ந்தாலும் உங்களைப் பற்றிய ஒரு பாதுகாப்பு உணர்வில் உள்ளீர்கள். நீங்கள் ஜீவன் முக்தி நிலை பெற்றுவிட்டால் நீங்கள் யோசித்து செயற்படமாட்டீர்கள். இதயத்திலிருந்து செயற்படுவீர்கள் அவ்வளவுதான். அதன் விளைவு எவ்வாறு இருக்கும் என்று யாராலும் கூற இயலாது. ஒவ்வொரு நாளும் அது மாறுபடலாம். ஆனால் உங்களுக்கென நீங்கள் துய ரப்படமாட்டீர்கள். மனித இனத்தின் துயரம் உங்களுடைய துயரமாகிவிடும். உங்களுடைய தனிப்பட்ட துயரமாக இனி அது இருக்காது.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



முதலில் மனிதனாகு. அப்போது பிற எல்லாம் தாமாகவே உன்னைத் தேடி வருவதைக் காண்பாய். நல்ல நோக்கம், நேரிய வழி, தர்மவீரம், நல்ல வலிமை ஆகியவற்றைப் பெறு. மனிதனாகப் பிறந்த நீ ஏதாவது அடையாளத்தை விட்டுச் செல். நீ இந்த உலகத்தில் பிற்நத போது உலகம் சிரித்தது. நீ அழுதாய். நீ உலகை விட்டுச் செல்லும் போது நீ சிரிக்க உலகம் உனக்காக அழத்தக்க நல்ல காரியங்களைச் செய். இதைச் சாதிக்க முடிந்தால் நீ மனிதன். இல்லையேல் நீ பிறந்தும் பயனில்லை.

நான் மதத்தை நேசிக்கவில்லை, மதத்துடன் நான் ஒன்றி விட்டேன. அது எனது வாழ்வாகிவிட்டது.

இந்துக்கள் எதையும்விட வேண்டியதில்லை, அவர்களது ரிஷிகள் வகுத்த பாதையில் முன்னேறிச் செல்லவேண்டும், நூற்றாண்டுகளாக உள்ள அடிமைத்தனத்தின் காரணமாக வந்த சோம்பலை உதறித்தள்ள வேண்டும். நாம் முன்னேறியே ஆக வேண்டும்.


ஒவ்வொரு நாட்டிற்கும் அதன் வாழ்க்கைக்கென்று ஒரு முக்கிய போக்கு உள்ளது. இந்தியாவில் அது மதம். அதை உறுதிப்படுத்துங்கள். அப்போது அதன் கரைகளில் உள்ள எல்லாம் அதனுடன் இசைந்து போகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# JDCA வெற்றிக்கிண்ணம்–2015

# ஜொலிஸ்ரார்ஸ்–கிறாஸ்கொப்பர்ஸ் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது





JDCA வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் பிரிவு D இல் ஜொலிஸ்ரார், கிறாஸ்கொப்பர்ஸ் அணிகள் போட்டி சமநிலையில் முடிவுற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 47.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது.

சிவலக்ஸன்–30, உதாதரன்–44, ருக்மன்–50, வாமணன்–27 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் கிறாஸ்கொப்பர்ஸ் சார்பாக மதூஸன், ஜெனன்தன், ராஜகாந்தன் தலா 2 இலக்குகளையும் அஜித்–01, யசின்தன்–03 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 43.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது.

டிலோஸன்–21, காந்தசீலன்–29, அஜித்–35, கோகுலன்–34, சரண்ராஜ்–37 ஓட்டங்களைப் பெற்றனர்.

வாமணன்–01, தீபன்–01, பிரசன்னா–03, சிவலக்ஸன், மதூசன் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

போட்டி சமநிலையில் முடிவுற்ற படியால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 6 ஆவது ஆண்டாக நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு இரு அணிகளும் தலா 5.5 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டது. (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## இன்றைய போட்டி

மாதனை விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்தாட்ட போட்டியில் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் வீனஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகமும் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கொலின்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பிரம்படி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (கு)

## முழுமதி வி.கழக மென்பந்துபோட்டிக்கு

### விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன


முழுமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 6 பேர் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை விளையாட்டு அரங்கு வீதி கோப்பாய் தெற்கு கோப்பாயில் அமைந்துள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.


வெற்றிபெறும் அணிக்கு பெறுமதியான பணப்பரிசிலும் வெற்றிக் கேடயமும் வழங்கப்படவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் 077 405 2630, 077 435 2468 எனும் தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (கு)

## உதயசூரியன் விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

### இறுதிப் போட்டியில் சென்.மேரிஸ்






வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்ட போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் கட்டைக்காடு சென். மேரிஸ் வி.கழகம் மற்றும் வல் வெட்டித்துறை வல்வை வி.கழகம் ஆகியன மோதின.

விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் 1:0 என்ற கோல் கணக்கில் கட்டைக்காடு சென்.மேரிஸ் வி.கழகம் 5ஆவது தடவையாகவும் இறுதி ஆட்டத்திற்கு தெரிவாகியுள்ளது. மேலும் இப்போட்டிக்கான ஆட்டநாயகனாக சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக வீரர் அருமை தெரிவானார்.

இவருக்கான இராசா ஈஸ்வரன் ஞாபகார்த்தமான வெற்றிக்கேடயத்தினை க.சண்முகநாதன் வழங்கி வைத்தார். (கு)

## றேஞ்சஸ் வி.கழகம் இறுதிப்போட்டிக்கு தகுதி



வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் நேற்று முன்தினம் நடந்த அரையிறுதி ஆட்டத்தில் சக்கோட்டை சென்.சேவியர் வி.கழகம் மற்றும் கொற்றாவத்தை றேஞ்சஸ் வி.கழகம் ஆகியன மோதின.

இதில் றேஞ்சஸ் வி.கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மேலும் இப் போட்டிக்கான ஆட்டநாயகனாக றேஞ்சஸ் விளையாட்டுக்கழக 14 இலக்க வீரர் தெரிவானார்.

இவருக்கான இராசா ஈஸ்வரன் ஞாபகார்த்தமான வெற்றிக்கேடயத்தினை சி.சிவதாஸ் வழங்கி வைத்தார். (கு)

## விளையாட்டு நிறுவனத்துடன் சாய்னா 25 கோடி ரூபாவுக்கு ஒப்பந்தம்

உலக பட்மிண்டன் சம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீராங்கனை சாய்னா நேவால் வெள்ளி பதக்கம் வென்று சாதனை படைத்தார். அவருக்கு வாழ்த்துக்கள் குவிந்தன.

சர்வதேச பட்மிண்டன் சம்மேளனம் நேற்று புதிய தரவரிசை பட்டியலை வெளியிட்டது. இதில் சாய்னா நேவால் 82,792 புள்ளிகளுடன் மீண்டும் நம்பர் வன் இடத்தை பிடித்தார்.

இந்த நிலையில் சாய்னா நேவால 25 கோடி ரூபாவுக்கு தனியார் விளையாட்டு நிறுவனத்துடன் 2 ஆண்டுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த விளையாட்டு நிறுவனம் சாய்னா நேவாலின் விளம்பரங்கள், காப்புரிமை போன்றவைகளை நிர்வகிக்கும். ஏற்கனவே இந்த விளையாட்டு நிறுவனத்தில் கிரிக்கெட் வீரர் சுரேஷ் ரெய்னா, குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம், வீரர் விஜயேந்தர்சிங், மல்யுத்த வீரர் சுனில்குமார் ஆகியோர் உள்ளனர். தற்போது சாய்னா நேவால் இணைந்துள்ளார்.

இதுகுறித்து சாய்னா கூறுகையில், புதிய விளையாட்டு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்வதில் மகிழ்ச்சி அளிக்கிறது. அவர்கள் எனது மற்ற பணிகளை கவனித்து கொள்வார்கள். நான் எனது ஆட்டத்தில் மட்டுமே கவனம் செலுத்த இது உதவும் என்றார். 2012ஆம் ஆண்டு சாய்னா நேவால் கிரிக்கெட் வீரர் டோனி பங்குதாரராக இருக்கும் ரித்தி ஸ்போர்ட்ஸ் நிறுவனத்துடன் 40 கோடி ரூபாவுக்கு 3 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு இருந்தார். தற்போது புதிய நிறுவனத்துடன் இணைந்துள்ளார்.

அடுத்த மாதம் நடக்கும் ஜப்பான் ஓபன், கொரிய ஓபன் போட்டிகளில் சாய்னா விளையாடுகிறார். (கு)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சங்காவின் இறுதி டெஸ்ட் இலங்கை நிதான ஆட்டம்



சங்கக்கார பலத்த எதிர் பார்ப்புக்கு மத்தியில் களமிறங்கினார். அவருக்கு ரசிகர்கள் மற்றும் வீரர்கள் வாழ்த்து தெரிவிததனர்.

சிறப்பாக ஆடிய சங்கக்கார 32 ஓட்டங்கள் எடுத்திருந்த போது அஸ்வின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

கொழும்புவில் நடைபெற்று வரும் 2ஆவது டெஸ்ட் போட்டியின் 2ஆம் நாள் முடிவில் இலங்கை அணி 3 விக்கெட் இழப்பிற்கு 140 ஓட்டங்களை எடுத்துள்ளது.

நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தொடக்க வீரராக களமிறங்கிய முரளி விஜய் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

மற்றொரு தொடக்க வீரர் ராகுல் சதம் அடித்தார். அவர் 108 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அவர் கோலியுடன் ஜோடி சேர்ந்த 3 ஆவது விக்கெட்டுக்கு 164 ஓட்டங்கள் சேர்த்தார். கோலி 78 ஓட்டங்களும், ரோகித் சர்மா 79 ஓட்டங்களும் எடுத்துள்ளனர்.

முதல் நாள் ஆட்ட முடிவில் இந்திய அணி 6 விக்கெட் இழப்பிற்கு 319 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இந்நிலையில் நேறறு தொடங்கிய 2 ஆவது நாள் ஆட்டத்தில் அஸ்வின் 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

பின்னர் விருத்திமான் சகாவுடன் அமித் மிஸ்ரா கை கோர்த்தார். இருவரும் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

இதனிடையே மிஸ்ரா 24 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

பின்னர் இறங்கிய இஷாந்த் சர்மா 2 ஓட்டங்களிலும் சகா 56 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்ததால் இந்தியாவின் முதல் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. முதல் இன்னிங்சில் இந்திய அணி 393 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

இதையடுத்து களமிறங்கியுள்ள இலங்கை அணியின தொடக்க ஆட்டக்காரர் கருணாரத்ன 1 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து கடைசி டெஸ்ட் தொடரில் ஆடும் குமார் சங்கக்கார பலத்த எதிர் பார்ப்புக்கு மத்தியில் களமிறங்கினார்.

இந்த தொடரில் சங்கக்காரவின் விக்கெட்டை அஸ்வன் கைப்பற்றுவது இது 3ஆவது முறை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் 2ஆம் நாள் ஆட்ட முடிவில் இலங்கை அணி



3 விக்கெட் இழப்பிற்கு 140 ஓட்டங்கள் எடுத்துள்ளது. மத்யூஸ் 19 ஓட்டங்களுடனும் திரிமன்னே 28 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். போட்டியின் மூன்றாம் நாள் இன்றாகும் . (க)



## ஆஷஸ் டெஸ்ட் ஆஸி ஆதிக்கம்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 5ஆவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் முடிவில் இங்கிலாந்து அணி 8 விக்கெட் இழப்பிற்கு 107 ஓட்டங்களை பெற்றுள்ளது.

இங்கிலாந்து- அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் தொடரின் ஐந்தாவது மற்றும் கடைசி டெஸ்ட் ஓவலில் நேற்று முன்தினம் தொடங்கியது. முதல் நாள் ஆட்ட முடிவில் அவுஸ்திரேலியா 79.4 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 287 ரன்கள் எடுத்திருந்தது. ஸ்டீவ் ஸ்மித் 78 ரன்களுடனும், வோக்ஸ் 47 ரன்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 2-வது நாள் ஆட்டம் தொடங்கியது. ஸ்மித் மற்றும் வோக்ஸ் சிறப்பாக ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். வோக்ஸ் 76 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். மறுமுனையில் ஸ்மித் சிறப்பாக விளையாடி சதம் அடித்தார்.

இந்த வருடத்தில் ஸ்மித் அடிக்கும் நான்காவது சதம் இதுவாகும். ஸ்மித் ஒருபுறம் சிறப்பாக விளையாட, மறுமுனையில் விக்கெட் வீழ்ந்த வண்ணமே இருந்தது.

143 ரன்கள் குவித்த ஸ்மித் 8-வது விக்கெட்டாக ஆட்டம் இழந்தார். 9-வது நபராக களம் இறங்கிய மிட்செல் ஸ்டார்க் 52 பந்தில் 58 ரன்கள் குவிக்க, அவுஸ்திரேலியா 125.1 ஓவரில் 481 ரன்கள் குவித்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இங்கிலாந்து அணி தரப்பில் ஸ்டோக்ஸ், பின், மொயீன் அலி தலா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்கள்.

அவுஸ்திரேலிய வீரர் மிட்செல் மார்ஷ் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் டெஸ்ட் போட்டியில் 100 விக்கெட்டை கைப்பற்றினார் பின். அதன்பின் மேலும் இரண்டு விக்கெட்டுகளையும் அவர் வீழ்த்தினார்

பின்னர், முதல் இன்னிங்சை விளையாடிவரும் இங்கிலாந்து 8 விக்கெட் இழப்பிற்கு 107 ஓட்டங்களை பெற்றுள்ளது. போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

## அமெ.தூதுவர் பொறுப்பேற்றார்

இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கான அமெரிக்காவின் புதிய தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கும் அதுல் கேசாப் நேற்று தன் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற வைபவத்தில் தனது நியமனக் கடிதம் அடங்கிய பேழையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்த அதுல் கேசாப், ஜனாதிபதியுடன் சிறிது நேரம் கலந்துரையாடினார்.

அதன்போது இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்திய அவர், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் வாழ்த்துக்களையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தெரிவித்துக் கொண்டார். இந்த வைபவத்தில் ஜனாதிபதியின் செயலாளர் அபேகோன் மற்றும் முப்படைத் தளபதிகள் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர். (எ-11)


### வீடு வாடகைக்கு

வெளி இடங்களில் இருந்து வருபவர்களு க்கும் திருமணங்கள் மற்றும் சுபகாரியங்கள் செய்வதற்கும் தங்கி நிற்பதற்கும் சகல வசதிகளுடனும் கூடிய வீடு நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு உண்டு.
(பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி)
(1554)

தொடர்பு - 0777035457

### சேல்ஸ்மன் தேவை

A/L படித்த புடைவை வியாபாரம் பழக ஆர்வம் உள்ள ஆண்கள் தேவை
(1555)

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்
41, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.


### அரசாங்க அறிவித்தல்
### மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
### கேள்வி கோரல்

யாழ்.மாவட்ட செயலகத்தால் பின்வரும் பொருட்களை 2015.09.07 - 2016.02.29 வரை பெற்றுக் கொள்வதற்காக பொருத்தமான வழங்குநரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. இவை தொடர்பான மேலதிகமான தகவல்களையும், விண்ணப்பப் படிவத்தினையும் செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் 2015.08.24 தொடக்கம் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2015.09.07 ஆந் திகதி பி.ப 2.00 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்கலின் விபரத்தினை குறிப்பிட்டு "தலைவர், பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்" என்னும் முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். அல்லது நேரடியாக செயலக நிதிக் கிளையிலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்த்தல் வேண்டும். கேள்விகள் 2015.09.07 ஆந் திகதி பி.ப 2.30 இற்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன்போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

- காகிதாதிகள், எழுதுபொருட்கள்
- நுகர்வுப் பொருட்கள்
- மின் இணைப்புப் பொருட்கள்
- உணவு / சிற்றுண்டி வகைகள்
- வாகன ரயர்கள்
- ரோணர் வகைகள்
- ஹாட்வெயர் பொருட்கள்
- இறப்பர் முத்திரைகள்
- குடிநீர் / பால்மா வகைகள்
- வாகன பற்றிகள்

**முக்கிய குறிப்பு:**

1. விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்வதற்கு தங்களது வியாபாரப் பெயர் பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இச்சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்களுக்கு மட்டுமே தாங்கள் கூறுவிலைகள் வழங்குதல் வேண்டும்.
2. பெறுகைக்குழுவினரால் தெரிவு செய்யப்படும் வழங்குநர் கொள்வனவுக் கட்டளை கிடைக்கப்பெற்று 2 தினங்களுக்குள் பொருட்களை யாழ் மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் நேரடியாகவோ அல்லது முகவர் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். இதற்கு ஏற்றவகையில் தங்களால் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
3. பொருட்களை வழங்குவதற்கு தெரிவு செய்யப்படும் வழங்குநர் வெளி மாவட்டத்தினைச் சேர்ந்தவராக இருப்பின், அந்நிறுவனத்தினருக்கு யாழ் மாவட்டத்தில் முகவரோ அன்றி விநியோகஸ்தரோ இருப்பது கட்டாயமானது. இதற்கான உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**நா.வேதநாயகன்**
**மாவட்ட செயலரும், அரசாங்க அதிபரும்**
**யாழ்.மாவட்டம்**
(சி-1878)

## தேசிய அரசிற்கு...

வெளியிடும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின உறுப்பினர்களின் உறுப்புரிமை ரத்து செய்யப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் அவர் இந்தக் கருத்தை முன்வைத்துள்ளார். தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு ஒரு சில உறுப்பினர்கள் எதிர்ப்பை வெளியிட்டனர்.

பவித்ரா வன்னியாராச்சி, குமார வெல்கம மற்றும் டலஸ் அழப்பெரும போன்றவர்கள் இவ்வாறு எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். எதிர்க்கட்சியில் இருந்து கொண்டே ஆளும் தேசிய அரசாங்கம் பற்றி கருத்து வெளியிட அனுமதியளிக்கப்பட வேண்டுமென அவர்கள் கோரியிருந்தனர்.

எனினும், தேசிய அரசாங்கத்திற்கு ஆதரவளிக்காத தரப்பினர் கட்சியிலிருந்து நீக்கப்பட வேண்டுமென சந்திரிகா தெரிவித்துள்ளார். கட்சியின் புதிய பொருளாளரான எஸ்.பி. திஸாநாயக்கவும் இதேவிதமான கருத்தை வெளியிட்டிருந்தார். (எ-11)

## ஆஸி. ஒத்து...

இலங்கைத் தேர்தலில் வெற்றியீட்டி பிரதமராக பதவிப் பிரமாணம் செய்து கொண்ட ரணில் விக்கிரமசிங்கவிற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்பட விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

பிராந்திய மற்றும் உலக விவகாரங்களில் இணைந்து செயற்படவும் இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவிற்கும் இடையில் மிக நீண்ட காலமாக உறவுகள் நீடித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத ஆட்கடத்தல் வர்த்தகம் முதலீடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையில் சிறந்த உறவு காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார். (எ-11)

## பிரதமர்...

இந்த நிலையில், நேற்று மகிந்த-சரத் பொன்சேகா சந்தித்து பேசியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது ஒருபுறமிருக்க,

ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் போட்டியிட்டு, இரு தடவைகள் மைத்திரிபால சிறிசேனவிடம் தோல்வி கண்ட மகிந்த ராஜபக்ஷ நேற்று மைத்திரியை சந்தித்து உரையாடியிருந்தார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.தே.கவின் நிகழ்ச்சி...

போவதுமில்லை. ஏற்க போவது மில்லை. அங்கீகரிக்க போவது மில்லை. பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 95 ஆசனங்கள் கிடைத்துள்ளன.

தேர்தல் சட்டங்களை மீறி, ஐக்கிய தேசியக் கட்சி சகல ஊடகங்களையும் தன்வசப்படுத்தியிருந்த நிலையில், இந்த எண்ணிக்கை கிடைத்தது.

அண்மைய கால வரலாற்றில் 95 உறுப்பினர்களை கொண்ட பலமான எதிர்க்கட்சி உள்ளது. கடந்த காலங்களில் சுமார் 40 பேரை கொண்ட எதிர்க்கட்சியே இருந்தது.

அத்துடன் பெரும்பான்மை பலத்தை பெறாத கட்சிக்கு எதிர்க் கட்சியில் இருந்து உறுப்பினர்களை இணைத்து அரசாங்கத்தை ஏற்படுத்துவது அரசியல் காட்டிக் கொடுப்பாகும்.

அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை தேசிய அரசாங்கத்துடன் இணைக்கும்போது ஆர்.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக தெரிவாவார்.

ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவின் அறிக்கை செப்ரெம்பர் இறுதியில் வெளியிடப் படவுள்ளது.

ஆர்.சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைப்பது என்பது மனித உரிமை ஆணைக் குழுவின் அறிக்கை வெளியிடப் படும் போது அதில் உள்ள விடயங்கள் உண்மையானது என உலகம் முழுவதும் எடுத்துச் செல்ல வாகனத்தை பெற்றுக்கொடுத்து ஆகி விடும்.

இதனை நாங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்கவே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசிய கடசியுடன் கூட்டு சேர வைக்கின்றனர்.

இதனால், நாங்கள் தேசிய அரசாங்கத்திற்கு இணங்க போவதில்லை. தேசிய அரசாங் கத்திற்கு இணங்காத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நாங்கள் செயற்படுவோம் எனவும் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## புதிய அமைச்சரவை...

நாளை மறுதினம் 24ஆம் திகதி பதவிப் பிரமாண நிகழ்வு நடைபெறவுள்ளது.

ஜே.வி.பி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி போன்றன தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் பெயர் விபரங்களை அறிவித்துள்ளன.

அனைத்து தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் மற்றும் தேர்தலில் போட்டியிட்டு தெரிவான உறுப்பினர்கள் ஆகியோரின் பெயர் விபரங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர், அமைச்சரவைப் பதவிப் பிரமாணம் நடைபெறும் என எதிர் பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப்பிரமாண நிகழ்வு நடைபெறவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கம் பற்றி பேசப்பட்டு வருகின்றது. அமைச்சர்களின் எண்ணிக்கை குறித்து இன்னமும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என அவர் கொழும்பு ஊடகமொன்றுக்குக் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## ஜனாதிபதி மைத்திரியை...

பெறவுள்ள ஐ.நா பொதுச்சபை கூட்டத்தில் கலந்து கொள்ள மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டுள்ளார்.

இதன்போது இலங்கையின் பிந்திய நிலைவரங்கள் தொடர்பில் அவர் பான் கீ மூனுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இதனிடையில், இலங்கையில் அமைதியான முறையில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தியதற்காக பான் கீ மூன் தனது தொலைபேசி உரையாடலின் போது மைத்திரிபால சிறிசேனவுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த உரையாடலின் போது மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்படவுள்ள ஐ.நா விசாரணை அறிக்கை தொடர்பில் ஜனாதிபதியுடன் பான் கீ மூன் முக்கியமாக பேசியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## தேசிய பட்டி...

தேசியப்பட்டியல் உறுப்பினர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்றுள்ள வாக்குகளின் அடிப்படையில் 12 தேசியப்பட்டியல் உறுப்பினர்களின் பெயர்களை அந்தக் கூட்டணி அறிவித்துள்ளது.

லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, திலங்க சுமதிபால, சரத் அமுனுகம, டிலான் பெரேரா, விஜித விஜேமுனி சொய்ஸா, எஸ்.பி.திசாநாயக்க, மகிந்த சமரசிங்க, மலித் ஜயதிலக்க, எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, அங்கஜன் ராமநாதன், ஏ.எச்.எம். ஃபவுஸி, ஃபைஸர் முஸ்தபா.

இலங்கை நாடாளுமன்றத்தில் மொத்தமாக உள்ள 29 தேசியப் பட்டியல் இடங்களில் 25 இடங்களை தேசிய அரசாங்கம் அமைத்துள்ள பிரதான இரண்டு ஆளும் கட்சிகளே பெற்றுள்ளன.

மூன்றாவது பெரிய கூட்டணிக் கட்சியாக உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2 இடங்களும் மக்கள விடுதலை முன்னணி 2 இடங்களுமாக மிகுதி 4 தேசியப்பட்டியல் உறுப்பினர்களை பெற்றுளளன. (மற்றொரு செய்தி உள்ளே) (எ-11)

## 16 ஆவது பிரத...

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கலந்து கொண்டு ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்துத் தெரிவித்தார்.

அதேவேளை, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு தேசிய அரசாங்கத்தை அமைப்பது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும இடையிலான புரிந்துணர்வு உடன்பாடும் நேற்று கையெழுத்திடப்பட்டுள்ளது.

புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர் ஜனாதிபதி செயலகத்தில் இந்த புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்திடப்பட்டது.

இந்த உடன்பாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதி பொதுச்செயலாளர் துமிந்த திசநாயக்கவும், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் கபீர் காசிமும் கையெழுத்திட்டனர். (எ-11)

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
aat [ Sri Lanka]
Foundation, Intermediate, Final
AA1, AA2, AA3
Qualification:- GCE O/L 6 PASSES
MEDIUM – TAMIL & ENGLISH
ஆரம்பம் :- 22-08-2015 சனிக்கிழமை. உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
Further Details:
JAFFNA COLLEGE
Undergraduate Dept
Contact Tel Number : 0212223382, 0212229149
(C-1882)

விளம்பரத்துறையில் வேலை வாய்ப்பு
ஊதியம் சராசரியாக மாதம் 30,000
யாழ்ப்பாணத்தினை தலைமையகமாக கொண்ட எமது நிறுவனத்திற்கு முழுநேரமாக / பகுதிநேரமாக விளம்பரம் செய்யக்கூடியவர்கள் வடமாகாணத்தின் அனைத்து ஊர்களிலிருந்தும் தேவைப்படுகிறார்கள்.
- அடிப்படை கல்வித்தகமை : O/L ● சிறந்த தொடர்பாடல் திறமை ● நேர்த்தியான உடையலங்காரம்
- வாடிக்கையாளரிடம் அன்பாகவும் மரியாதையாகவும் நேர்த்தியாகவும் பழகும் திறமை ● நாணயம்
- வேலை நேரம் : உங்கள் விருப்பப்படி எந்தநாளும் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் செய்யலாம்.
- ஊதியம் சராசரியாக மாதத்திற்கு 30,000 (உங்களின் திறமைக்கும் உழைப்பிற்கும் ஏற்ப கூடலாம், குறையலாம்)

திறமையான 20 பேர் சேர்த்துக்கொள்ளப்படுவர். 10 நாட்கள் பயிற்சியின் பின்னர் வேலை ஆரம்பம். 6 மாதத்தின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

V2 TRAVELS & TOURS
(1546)
நேர்முகத்தேர்வு : 22-08-2015
காலை 10 மணி முதல் 3 மணிவரை (சனிக்கிழமை)
சுயவிபரக்கோவையுடன் வரவும்
தொடர்புகளுக்கு : 0768226243
யாழ்ப்பாணம் 49A,சப்பல் லேன்,யாழ்ப்பாணம்.

பணியாளர் தேவை
Electrical, plumbing
Hardware
அனுபவம் மிக்க பணியாளர் தேவை
0773032587 / 0774812382
(C-1885)

மருந்தாளர் தேவை
பிரபலமாக இயங்கிவரும் மருந்தகத்திற்கு Srilankan Medical Council இல் பதிவு செய்யப்பட்ட மருந்தாளரும் உதவியாளரும் தேவை.
தொடர்புகளுக்கு :- 077 303 2587
(C-1887)

வாக்காளப் பெருமக்களுக்கு நன்றிகள்
2015 பாராளுமன்றத் தேர்தலில் என்னையும் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்த வன்னி வாழ் தமிழ் தேசிய உணர்வாளர்களுக்கு எனது நன்றிகள் உரித்தாகுக.

என்றும் மக்களின்
உணர்வுகளுடன் சங்கமித்த
வைத்தியகலாநிதி
சி.சிவமோகன்
(பாராளுமன்ற உறுப்பினர்)
(C-1882)
தமிழ் தேசியக் கூட்டமைப்பு

O/L உடன்
சுவிஸ், நியூசிலாந்து, சிங்கப்பூர், மலேசியாவில் மாதம் 3 இலட்சத்துக்கு மேல் உழைக்கக்கூடிய
Business & Hotel Management
3ஆம் அணி

யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பித்து 6 மாதங்களில் விரும்பிய நாடு செல்லும் விசா உத்தரவாதம்!
SEGi | B.H.M.S. | nmit | William Angliss Institute
MALAYSIA | SWITZERLAND | NEW ZEALAND | AUSTRALIA
அனுமதிகளுக்கு
077 3616 798
021 222 0011
கற்கைநெறி ஆரம்பம் 27-08-2015 வியாழன் 10 மணி
SIKARAM Any Visa to Any Country
FREE ENGLISH COURSE
வெளிநாடு செல்ல விரும்பாதோருக்கு யாழ். கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்து தருகிறோம்.
Sikaram (Pvt) Ltd.
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம்) (C-1881)

ஆங்கில வகுப்பு
தரம் 02, 03,04, 05, 06, 07, 08, 09, 10ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர் களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். M .Rajan (1549)
தொடர்புகளுக்கு:-0772286054

விரும்பிய நாட்டில்-விரும்பிய துறையில்
படிக்க - உழைக்க - குடியேற
STUDENT VISA – SPOUSE VISA – DEPENDANT VISA
WORK VISA - SKILLED MIGRATION – VISIT VISA
கனடா Express Entry Visa
தொழில்வாய்ப்புடன் குடியுரிமை(PR)
Degree/Diplomaவுடன் குறைந்தது ஒரு வருட தொழில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும்
Student VISA
UK, Australia, Spain
New Zealand, Switzerland,
Canada & Malaysia
FREE Assessment
SIKARAM Any Visa to Any Country
ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள
www.sikaram.lk
Sikaram (Pvt) Ltd.,
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி,
யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0777 32 4004 / 021 222 00 11
(C-1881)

இப்பத்திரிகை வலம்புரி அன்.சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.08.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org